முன் அட்டை

# குதிரைக்காரன் மகன்

## இலக்கிய நயம்

- திருக்குறள், முத்தொள்ளாயிரம், நற்றிணை, குறுந்தொகை, பழமொழி நானூறு பாடல்கள்

படம் : குதிரையில் ஒருவர் சவாரி வருதல்

கே.வி. குணசேகரம்

# நூல் விபரம்

நூலின் பெயர் : குதிரைக்காரன் மகன்

இலக்கியநயம் :

திருக்குறள்,
முத்தொள்ளாயிரம்,
நற்றிணை, குறுந்தொகை,
பழமொழி நானூறு பாடல்கள்


நூலாசிரியர் : கே.வி. குணசேகரம்

பதிப்பாண்டு : 2012.03.25.

மொத்தப் பக்கங்கள் :

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை
கு.டு.1.14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு - 12

# அணிந்துரை

கே.வி. குணசேகரம் என்ற பெரும் எழுத்தாளர், தனது இலக்கிய நயம் என்ற நூலுக்கு அணிந்துரை தந்து உதவும்படி வேண்டினார். இது எனக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இதுவரை தமிழ் இலக்கிய உலகில் யாரும் எழுத்தாதவற்றை எழுதுபவர் திரு.கே.வி. குணசேகரம். இவர் எழுதிய திருக்குறள் பாக்கள் 1330 இற்குமான கதைகள், பகவத்கீதைச் சூத்திரங்கள் 700 இற்குமான கதைகள், ஆத்திசூடிச் சூத்திரங்கள் 108 இற்குமான கதைகள், திருவருட் பயன்பாக்கள் 100 இற்குமான கதைகள், ஆசாரக்கோவையின் பாக்கள் 101 இற்கான கதைகள், வேத உபநிடதக் கதைகள், இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதத் தொகுதிகள் 10, திருமந்திரக் கதைகள் என்பவற்றை நான் வாசித்துள்ளேன். இவரது மேற்கூறப்பட்ட கதைகள் யாவும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் புரியும்.

சமூகத்தில் நடைபெறும் சம்பவங்களை இந்துசமயத் தத்துவங்களினூடாக அனைவருக்கும் விளங்குமாறு கதைகளாக எழுதுவதால், இந்துக்கள் சமய தத்துவங்களையும், சமய உண்மைகளையும்

இலகுவாகப் புரிந்து கொண்டுள்ளனர். சமயம் வேறு சமூகம் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்று என்று எண்ண வைப்பர் திரு.கே.வி. குணசேகரம்.

மனிதன் தோன்றிய காலம் முதல் இன்றுவரை ஏராளமான சமயநூல்கள் இயற்றப்பட்டன. ஆனால் அவை யாவும் கற்றவர்களுக்கே விளங்கின. ஆனால் கே.வி. குணசேகரத்தின் நூல்கள் கதை வடிவாக இருப்பதால் எல்லோருக்கும் அவை விளங்கின. இந்து சமயத்திற்கு இதுவரை யாரும் செய்யாத சேவையை திரு. குணசேகரம் அவர்கள் செய்து வருகிறார். இந்து தத்துவங்கள் யாவும் எளிமையான கதைகளாக்கப்பட்டதால் இது வரை விளங்காதிருந்த தத்துவங்கள் யாவும் எல்லோருக்கும் விளங்குகின்றன. இது ஒரு புதிய எழுச்சியாகும். அத்துடன் அவர் ஒரு பெருங் கல்வி மான். நாவலர் நிறுவிய பாடசாலையில் அவர் அதிபராக இருந்த 1989 – 2005 ஆண்டுக் காலப்பகுதியில் அவரது பாடசாலையில் எழுத்தறிவில்லாத மாணவர்கள் ஒருவர் கூட இருந்ததில்லை. 2005 – 2009 வரை அவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்த நல்லூர்க் கல்விக் கோட்டம் இலங்கையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முதலாம் இடம் பெற்றது.

இவ்வாறு கல்வியில் பெருஞ்சாதனைகள் புரிந்த குணசேகரம் இலக்கியத்திலும் இதுவரை உலகில் எவரும் செய்யாத சேவையைச் செய்துள்ளார் இலக்கிய நயத்தில் நயக்கப்பட்ட திருக்குறட்பாக்களின் உரையும், கதையும் மிகவும் சிறப்பாகவும் புதுமையானதாகவும், இதுவரை தமிழ் உலகில் யாரும் சொல்லாததாகவும் அமைந்துள்ளது. அவர் இன்னும் பல புதுமைகளை இலக்கியத்தில் செய்யவேண்டுமென அவரது குலதெய்வமான விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்,
எஸ். வரதராசன்.

# என்னுரை

தமிழ் இலக்கிய உலகில் இதுவரை எந்தத் தமிழ் அறிஞர்களும் எழுதாதவற்றை ஒரு புதிய வடிவில் எழுதி வருகிறேன். திருக்குறள் பாக்கள் 1330 இற்கும் கதைகள் எழுதி நூல்களாக வெளியிட்டேன். இப்பொழுது திருக்குறளுக்கு யாரும் எழுதாத உரையும் இலக்கிய நயமும் எழுதி வருகிறேன். இத்துடன் பழந்தமிழ் நூல்களான முத்தொள்ளாயிரம், பழமொழி 400, நற்றிணை, குறுந்தொகை, புலவர்களது தனிப்பாடல்கள் என்பவற்றிற்கு இலக்கிய நயமும், அதை விளக்கக் கதைகளும் எழுதியுள்ளேன். இவை யாவும் தினமுரசு வாரமலரில் வெளி வந்தன. புதிய வடிவையும் வித்தியாசமான எழுத்தையும் வாசகர்கள் வரவேற்றனர். அத்துடன் நான் எழுதியவற்றை - யெல்லாம் ஒருவரி கூட நீக்காது வெளியிட்ட தினமுரசு ஆசிரியர் திரு. ப. ஸ்ரீகாந் அவர்களின் மனவுறுதிகளைப் பாராட்டுதல் வேண்டும்.

சமூகத்தில் உள்ள பிரச்சினைகளைக் கதை மூலமாகவேனும் பலர் வெளியிட அஞ்சுவர். இந்நூலைக் கணனி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளைத் திருத்தித் தந்த ஆசிரியை செல்வி. ப.

இறைமகளுக்கும், ஓய்வு பெற்ற அதிபர் திரு.வா. ஜெயரத்தினத்திற்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. க. இராஜேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். அடுத்து திருமந்திரக் கதைகளுடன் சந்திப்போம்.

# கற்றதனால் ஆய பயன்

பழந்தமிழ்ப் புலவர்கள் வேதங்கள், உபநிடதங்கள், புராண இதிகாசங்கள், ஏனைய சமய அறிவு நூல்களை யெல்லாம் கற்ற பின்பே கவிதைகளை எழுதினர். அக் கவிதைகளில் புராண இதிகாச, வேதஉபநிடதக் கருத்துக்களும், கதைகளும் ஓர்அடியில் குறிக்கப்பட்டிருக்கும்' 'தேவர் அனையர் கயவர்' என்ற ஓர் அடிமூலம் திருவள்ளுவர் தேவர்களது சரித்திரத்தையே கூறுகிறார். இதுபோலக் காளமேகப் புலவர் ஓர் அடி மூலம் ஒவ்வொரு தெய்வங்களின் மகிமைகளைப் பற்றிக் கூறுகிறார். இது பழந்தமிழ் புலவர்களுக்குக் கைவந்த கலை.

இத்தகைய பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுவோர் பழந்தமிழர் வரலாறு முழுவதையும் கற்றிருத்தல் வேண்டும். அவற்றைக் கற்காது எழுதும் உரைகள் பூரணமாகாதவை. திருக்குறளில் வேத உபநிடத இதிகாச புராணக் கருத்துக்கள் மட்டுமன்றி, பழந்தமிழ் நூல்களினதும், சமண நூல்களினதும் அறக்கருத்துக்கள் நிறைந்துள்ளன. அவற்றையும்

அக்காலச் சூழலையும் அறியாது எழுதப்படும் உரைகள் மயக்கத்தைத் தரும்.

பழந்தமிழ்ப் புலவர்கள் ஒரு போதும் ஒற்றுமையாக இருந்ததில்லை. அத்துடன் ஏனைய புலவர்களை மதித்ததும் இல்லை. மகா கவியான காளிதாசனைத் தண்டிக் கவிராயர் அறிஞராக ஏற்றதில்லை. கம்பரை, காளமேகத்தை திருவள்ளுவரை அன்று வாழ்ந்த புலவர்கள் மதித்ததில்லை. சமயச் சண்டைகளோடு வித்துவச் சண்டைகளும் நடைபெற்றன. அச்சண்டைகளை அரசராற்கூடத் தீர்க்க முடியவில்லை. இதனால் கடவுள்கள் நேரில் தோன்றி உண்மையைப் புரிய வைத்த வரலாறுகளை நாம் அன்றைய நூல்களிற் காண்கிறோம். காளிதாசனுக்கும், கம்பருக்கும் காளி தோன்றிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தாள். தருமிக்குப் பொற்கிழி அளிக்கப்பட்ட போது சிவபெருமான் நேரில் வந்து எடுத்துக்கூறியும் நக்கீரர் அப்பாடலின் பொருளைத் தவறென்றார். அதனால் சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணைக் காட்டினார். அதற்கு நக்கீரர்' "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்றார். இதிலிருந்து அன்று வாழ்ந்த புலவர்கள் ஆணவம் மிக்கவர்களாக இருந்தமை தெரிய வருகிறது.

பண்டைய புலவர்கள் எவரும் கடவுளின் மீது நம்பிக்கை இல்லாதவர்களாக வாழ்ந்ததை நாம் எந்த நூல்களிலிருந்தும் அறிந்து கொள்ள முடியவில்லை. கடவுளின் அருளால்தான் புலவர்கள் பாடல்களைப் பாடினர். பாடல்களைப் பாடக் கடவுளும் அவர்களுக்கு உதவினார். மூடர்களையும், முரடர்களையும், இழிந்தவர்களையும் கடவுள் தனது அருளால் மேலான கவிஞராக்கியதாக வரலாறு கூறுகிறது. இவற்றையெல்லாம் உணர்ந்த திருவள்ளுவர் அக்கால அறிஞர்களின் ஆணவத்தை அகற்றி மற்றவர்களையும் மதிக்க வேண்டும் என்று விரும்பினார். திருக்குறள் பாக்கள் யாவும் மக்களுக்கு ஆலோசனை கூறுபவையாகவே உள்ளன.

அந்த வகையில்தான் திருவள்ளுவர் திருக்குறள் மூலம் புலவர்களைத் திருத்த வேண்டுமென்பதற்காகவே,

“கற்றதனால் ஆய பயன் என்கொல்,
வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்”

என்று பாடினார். இதற்கு உரை எழுதியோர் கடவுளின் புனிதமான திருவடிகளை வணங்காதவன் தான் கற்ற கல்வியால் ஒரு பயனும் பெறமாட்டான் என்று எழுதியுள்ளனர். இவ்வுரை அக்காலச் சமூகத்திற்கும்

பொருந்துவதாக இல்லை. பழந்தமிழ் அறிஞரைப் போலவே இன்றுள்ள அறிவுடையவர்களும் கற்றவர்களை மதிப்பதில்லை. தன்னை விட மேலானவர்கள் இல்லை என்று நினைக்கிறார்கள். ஒழுக்கக் கருத்துக்களை மக்கள் பின்பற்ற வேண்டும். ஒழுக்கமாகப் பொருள் தேடவேண்டும். ஒழுக்கமாக இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பதே திருக்குறளின் போதனை.

வள்ளுவர் கடவுளை வணங்குவதை விட ஒழுக்கமாக வாழ்வதையும், பிறரைப் புண்படுத்தாது உதவி செய்ய வேண்டும் என்பதையுமே வலியுறுத்துகிறார். இந்த வகையில் கடவுளை வணங்காத பெரியவர்கள் வாழாத ஒரு சமூகத்திடம் கடவுளை வணங்கு என்று சொல்லியிருக்க மாட்டார். கற்றவர்கள் கற்றவர்களை மதிக்க வேண்டும் என்றே சொல்லியிருப்பார்.

நூல்களைக் கற்று உயர்ந்தவர்கள், மெய்யுணர்வை உணர்ந்து கொண்ட அறிஞர்களை மதிக்கவில்லையானால் அவர்கள் கற்ற கல்வியால் எந்தப் பயனும் இல்லை என்பதே பொருத்தமானதாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். அறிஞர்களோடு சேர்ந்து இன்னொரு அறிஞரைப்

பரிகசிக்கும் கூட்டம் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கிறது. சிவபெருமான் புலவராக வந்து தன்னை இனங் காட்டிய போதும் அதை உணர மறுத்த நக்கீரனின் கூற்றையே அப்போது அவையில் இருந்த புலவர்கள் அனைவரும் ஆதரித்தனர். தருமிக்காக யாரும் பேசவில்லை. அவர்கள் உண்மையான பொருளை உணர மறுத்ததை உணர்ந்த வள்ளுவர், அப்படியான தன்மை நீங்க வேண்டும் என்பதற்காகவே இக்குறளைப் பாடினார். அக்கால மக்கள் எல்லாத் தீய செயல்களையும் செய்தனர். அதுபோல அறிஞர்கள் பொறாமை கொண்டு ஆணவத்துடன் நடந்தனர். இவைகளைக் களைய வேண்டும் மென்றே வள்ளுவர் விரும்பினர். மாதா, பிதா குருவைப் போல மெய்யுணர்வைத் தரும் நூல்களைக் கற்றுணர்ந்தவர்களும் தெய்வம்தான் என்று வள்ளுவர் கூறும் குறள் இது

“கற்றதனால் ஆய பயன் என் கொல்,

வாலறிவன் நன்றாள் தொளா அர்எனின்”

# பெண்ணும் பெருமையும்

பெண்களின் அழகு பலரைப் பைத்தியமாக்கியுள்ளது. சிலரை அறிவாளியாக்கியுள்ளது. சாதனைகள் புரிந்த ஒருவனின்

சரித்திரத்தை எடுத்தாராய்ந்தால் அவனின் பின் நிட்சயமாக ஒரு பெண் இருப்பதைக் காணலாம். சாதனைகள் பலவகை. காதல் வெற்றியால் ஏற்படுபவை, காதல் தோல்வியால் ஏற்படுபவை என இரு வகையுண்டு. வெற்றியை விடத் தோல்விகளால் தான் பெரும் பெரும் சாதனைகள் நிலைநாட்டப்பட்டன என்று சரித்திரங்களும் இலக்கியங்களும் கூறுகின்றன.

பெண்ணைத் தமிழிலக்கியங்கள் மிகமிக உயர்த்திப் போற்றுகின்றமையை நாம் கண்டிருக்கிறோம். பெறுமதியான வை, பெறுமதியானவற்றை உற்பத்தி செய்பவை எல்லாம் பெண்ணென்று இலக்கியங்களும், இந்து சமயங்களும் சொல்கின்றன. உதாரணமாகச் சொல்லப் போனால் பூமாதேவி பெண், செல்வம் பெண், கங்கை பெண், கவிதைகள் பெண், மரம், செடி, கொடிகள் எல்லாம் பெண்ணென்று உவமித்து அதற்குத் தெய்வவடிவம் கொடுத்துப் பேணிக் காத்து வருவது இந்து சமய மரபு. இந்த வகையில் ஒவ்வொரு குடும்பமும் பெண்களைப் போற்றி அவதானமாகப் பேணுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

அது பணக்காரக் குடும்பம். குடும்பத் தலைவன் வணிகன். தலைவி ஊர் மக்களைத் தனது

உடன்பிறப்பாக நினைத்து அன்பு செலுத்தி மகிழ்பவள். அவர்களுக்கு ஓர் ஆண் மகன். வீரமுள்ள ஆண்மகன் அவன். அவர்களுக்குக் காயத்திரி என்றொரு மகள். தந்தையும் தாயும் மகளான காயத்திரி மீது மிகுந்த அன்பு வைத்திருந்தனர். அந்த அன்பின் பெருக்குஅவளை, தான் நினைத்தவை யாவற்றையும் செய்ய வைக்கிறது. இந்நிலையில் அவள் ஓர் ஆடவனைக் கண்டு காதல் கொள்கிறாள். அவனும் அவளின் பேரழகில் மயங்குகிறான். இருவரும் பலமுறை சந்தித்துக் கொள்கின்றனர். அன்று எதிர்பாராத விதமாகக் கோயிலில் காயத்திரியைச் சந்தித்து விட்டான் அவன். எதுவும் கதைக்க முடியவில்லை. சுற்றிவர ஊரவர் நிற்கின்றனர். அவன் அவளது கண்களைப் பார்த்தான். அவை சோகமிகுதியால் துடிதுடித்தன. தலையின் முன்பக்கத்தில் உள்ள முடி சுருண்டு நெற்றியில் தவழ்ந்தது. மெல்லிய காற்று அதன் மேற்பட அது மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்தது. சிவந்த நெற்றியின் மீது அசைந்தாடும் அவளின் சுருண்ட முடி அவளின் வனப்பை அதிகரிக்கச் செய்து அவனது உணர்வுகளை மெல்லத் தட்டி எழுப்பியது. உச்சிபிரிக்காது தலையைச்சீவி இரட்டைப் பின்னல் விட்டிருந்தாள். ஒரு பின்னல் அவளின் இடப்பக்கத்தோளால் முன்னே வந்து இரு

மார்பகங்களையும் பிரித்து இடையைத் தாண்டி நின்று அசைந்தது.

மூக்குப் பள்ளத்துக்குச் சிறிது மேலே நெற்றியின் அடியில் ஒட்டப்பட்டிருந்த வட்டவடிவமான கறுப்புப் பொட்டுக்குக் கீழ் சிறிய நட்சத்திரப்பொட்டு மினுமினுத்தது. சதைப்பிடிப்பான அவளது சிவந்த கன்னங்கள், அவனைக் கண்டதும் உண்டான சிலிர்ப்பின் மலர்ச்சியால் உதடுகள் அசையக் கன்னங்கள்குழி விழுந்தன. சிவந்த உதட்டுக்கு மேலும் வனப்பூட்டச் செந்நிறச்சாயம் பூசியிருந்தாள். உற்றுப் பார்த்தால் தான் அது செந்நிறப் பூச்சு என்று தெரியும். அனுபவப்படாதவர்கள் அது சாயம் பூசப்படாத இதழ்கள் என நினைப்பர்.

அவன் கண்களை மூடி விட்டுத் திறந்து பார்த்தான். அவள் முகில் வண்ண நீல நிறக் காஞ்சிபுரச் சேலையில் தேவதையாக ஒளிர்ந்தாள். தேவமகளின் தோற்றத்தை உடைய அவளது கண்கள் அவனது உயிரை உண்டன. அழகான கருநிறப் புருவத்துக்கு மை தீட்டியிருந்தாள். வளைந்த அப்புருவங்கள் மூன்றாம் பிறைபோல் இருந்தது. அழகான மலர் அம்புகளை எய்து நெஞ்சத்தைச்

செயலிழக்கச் செய்யும் வில் போன்ற புருவங்கள் வளையாது நேராக இருந்திருக்குமானால் என்னைக் கொலை செய்ய வல்ல மலரம்புகளை எய்திருக்க மாட்டாது என்று எண்ணினான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அழகை மேலும் மேம்படுத்தவென அவள் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி அவளின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்தது. கைதேர்ந்த ஓவியனால் வரையப்பட்ட ஓவியம் ஒன்று உயிர்த்துக் கோயிலுக்கு வந்துள்ளதென்றே அவன் நினைத்தான்.

பூசை முடிந்ததும் ஒவ்வொருவராகச் சென்று கொண்டிருந்தனர். காயத்திரி அவனைச் சந்திப்பதற்காக மெதுவாக வீதியை வலம் வந்து கொண்டிருந்தாள். அவர்களது காதலை அறிந்த பெற்றோர் அவளை எச்சரித்து கொண்டிருந்தனர். அவனை மறந்துவிடும்படி கூறிக் கொண்டிருந்தனர். அவளது தகப்பனும் சகோதரனும் அவளை எச்சரிப்பதோடு நிறுத்தாது தண்டனைகளும் கொடுத்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் அவளுக்குத் திருமணம் பேசப்பட்டது.

காயத்திரி கோயில் வீதியை வலம் வரும்போது அவன் அவளின் பின்னால் வந்தான். ‘எனக்குத் திருமணம் பேசுகிறார்கள். என்னை உடனே அழைத்துச் செல்லுங்கள். காலதாமதம் செய்யாதீகள்” என்றாள் காயத்திரி. அவளது குரலில் துயரம் தோய்ந்திருந்தது.

“இன்று இரவு பத்து மணிக்குப்பின் நான் கோயிலில் காத்திருக்கிறேன். வந்தால் அழைத்துச் செல்வேன்” என்று கூறினான் அவன். அன்று இரவு அவள் வந்தாள். அவன் அழைத்துக் கொண்டு தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றான். இருவரும் விடியும் வரை உறங்கவில்லை. காயத்திரி மகிழ்வின் உச்சியில் இருந்தாள். அவன் அவளைப் பார்த்தான். அவள் அவனைப் பார்த்தாள். அவளின் உதடுகளைவிடக் கண்கள்தான் மிகவும் நளினமாகச் சுழன்று நடனமாடி அதிகமாகப் பேசின. குரலின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்பக் கண்கள் அசைந்தாடின. தான் உலகில் உள்ள எல்லா இன்பங்களையும் பெற்றுவிட்டதாக அவன் நினைத்தான்.

உலகம் தனது கைப்பிடிக்குள் வந்துவிட்டதாக அவள் நினைத்தாள். இவ்வாறு மூன்று தினங்கள்

கழிந்தன. நான்காம் நாள் காயத்திரியின் தகப்பனாரும் கையாட்கள் பலரும் ஒன்று சேர்ந்து வந்து அவனைத் தாக்கிவிட்டுக் காயத்திரியைப் பலவந்தமாக அழைத்துச் சென்றனர். வீட்டுக்கு கொண்டு வந்து சிறை வைத்த காயத்திரியின் தகப்பன் அவளைப் பலவாறு ஏசினார். பெண்கள் தாம் விரும்பும் ஆடவர்களுடன் செல்கின்ற நிலை பல்லாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. அன்று வாழ்ந்த புலவர்கள் சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகளைப் பற்றிப் பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளனர். நிகழ்வின் உண்மைத் தன்மையை உள்ளபடியே கூறுவது அக்காலப் புலவர்களது பண்பாக இருந்தது. குறிப்பிட்ட சூழ்நிலையில் புலவனின் எண்ணம், சிந்தனை எப்படிப் போகிறது என்பதையும் அக்கால மக்களின் தன்மைகளையும் அவை படம்பிடித்துக் காட்டுகின்றன. காளமேகப் புலவர் ஓர் ஆடவனுடன் சென்ற பெண்ணைத் தண்டித்தது எப்படி என்று பாடிய பாடல் இது.

**“பேனு மீருமெ டுக்கவோ சடை**
**பின்னி வேப்பெ ண்ணெய் வார்க்கவோ**
**பிரிவிழிக்கரி யெழுதவோ வொரு**
**பீறு துண்டமு டுக்கவோ**
**கான கந்தனில் வைக்கவோ விரு**

**கால்வி லங்கிடு விக்கவோ**
**கற்சு ரங்கொடு சாடவோ வொரு**
**காரிய த்தினை யேவுமே"**

"உன்னுடைய கூந்தலில் நிறைந்திருக்கும் பேனையும், ஈரையும் எடுக்கவோ (மொட்டை அடிக்கவோ) வேப்பெண்ணை வைத்துத் தலைவாரிப் பூச்சூடவோ (வேப்பெண்ணை பைத்தியம் பிடித்தவர்களுக்குத்தான் வைப்பார்கள்) அவனைப் பிரிந்து வாடும் கண்களுக்கு மை எழுதவோ (கண்களுக்கு சிவப்பு நிறமுடைய எரியும் தன்மையிலான மிளகாய்த் தூளிடல்) கிழிந்த கந்தலை உடுத்தி விடவோ? காட்டில் கொண்டு சென்று விடவோ? அல்லது கற்களை வீசி உன்னைக் கொன்று விடவோ? இதில் எதைச் செய்வதென்று கூறு".

பெண் குலக்கொழுந்து. அவள்தான் குடும்பத்தை வாழ்விப்பவள். அவள்விளை நிலம் போன்றவள். ஆதலால் வேண்டப்படாதவரைத் திருமணம் செய்தால் குலப் பெருமை -யைக் குலைக்கும் செயல்களைச் செய்யும் ஒரு பரம்பரை உருவாகிவிடுமெனப் பெற்றோர் பயந்தனர். அதனால் புலவர்கள் ஒழுக்கம் சம்பந்தமான

பாடல்களையே அதிகமாகப் பாடினர். காதல் இனிமை என்றவர்கள். கொள்ளக் கூடாதவனுடன் காதல் கொண்டால் தம் உயிரிலும் மேலாக மதித்து வளர்த்த தமது பிள்ளைகளைக் கொலை செய்யவும் தயங்குவதில்லை என்றும் பாடினர். இன்னும் இந்நிலை சமூகத்தில் இருப்பதைக் காண்கின்றோம்.

# சூரியனே ஆதி பகவன்

திருக்குறளைப் பற்றிப் பேசாத அறிஞர்கள் எவரும் இல்லை. பேசும் அறிஞர்கள் யாவரும் அதன் உரையைப் பற்றித்தான் பேசுவார்கள். 2040 வருடங்களாகத் திருக்குறளைப் பற்றிப் பலரும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரின் தலைமையின் கீழ் திருக்குறள் ஆராய்ச்சி செய்யப்பட்டது. இதில் கடந்த 2040 வருடங்களாக ஆராய்ச்சி செய்யப்பட்டவையே ஆராயப்பட்டுப் பின்னர் நூலுருவாகின. 'திருக்குறள் கதைகள்' என்ற ஒரு விடயத்தைத் தவிர ஏனைய கட்டுரைகள் பெரும்பாலும் திருக்குறளின் உரையைப் பற்றியதாகும். திருக்குறளுக்கு உரை எழுதுவோர்

முதன் முதலில் எழுதப்பட்ட பரிமேலழகரின் உரையையே அனுசரித்து எழுதுகின்றனர்.

திருக்குறள் 2000 வருடங்களுக்கு முன் எழுதப்பெற்றது. அது அன்றைய சமூகத்தைப் பற்றியது. மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று கூறுவது. அந்நூல் 2000 வருடங்கள் கழிந்த போதும் இன்றும் பொருத்தமுள்ளதாகவே இருக்கிறது. அது போல இன்னும் 2000 வருடங்களின் பின்பு வாழும் மக்களுக்கும் பொருத்தமாக இருக்கும். அத்தகைய நூலில் உள்ள சில குறள்களுக்குமயக்கமான உரையையே இன்றும் உரை எழுதுவோர் தருகின்றனர். திருக்குறள் உண்மையைக் கூறுவது, உலகின் இயல்பைக் கூறுவது ஆனால் சில உண்மைகள் இயற்கைக்கு ஒவ்வாதனவாக இருப்பதாகத் தெரிகிறது.

வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் 55 ஆவது குறள் இவ்வாறு சொல்கிறது "பிற தெய்வங்களை வணங்காமல் தன் கணவனைத் தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் 'பெய் என்றால்மழை பெய்யும் இது இயற்கைக்கு முரணானது. இது பற்றிப் பின்பு ஆராய்வோம் இது

போலப் பல முரண்பட்ட உரைகள் உண்டு. அவை பற்றிய இலக்கிய ஆய்வே இது.

'அகர முதல எழுத் தெல்லாம்' ஆதி
பகவன் முதற்றே உலகு'

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருக்கின்றன. அது போல உலகம் கடவுளை முதலாகக் கொண்டது. இது பரிமேலழகரது உரையைத் தழுவிய உரை. இந்துமதங்களைப் பொறுத்த வரையில் ஐந்தொழில்களையும் புரிவதற்கு ஐந்து தெய்வங்கள் உள்ளன. அது போலக் கல்வி, செல்வம், வீரம் என்பவற்றிற்கும் மூன்று தெய்வங்கள் உள்ளன. அது தவிர நீர், காற்று, தீ என்பவற்றிற்கும் தெய்வங்கள் உள்ளன. காவல் தெய்வங்களும் உண்டு. இப்படி இந்து மதம் தொழில்களுக்கெனத் தெய்வங்களை வகுத்து வைத்திருக்கும் போது கடவுள் என்ற பொதுப் பதத்தைத் திருவள்ளுவர் பாவித்திருப்பார் என்று எண்ணத் தோன்றவில்லை. திருக்குறளில் சில தெய்வங்களின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. திருமகள், தேவர்கள், இந்திரன், திருமகளின் சகோதரி, எண்குணத்தவன் என்று இந்துமதத் தெய்வங்களின் பெயர்களைக் குறிக்கும் வள்ளுவர் உலகிற்கு

ஆதாரமானவர் கடவுள் என்று ஏன் குறிப்பிடல் வேண்டும்?

திருக்குறள் சமணநூல் என்று எடுத்துக் கொண்டாலும் சமண சமயம் சூரியனைத் தெய்வமாகக் கொண்டது. சொர்க்கம், நரகம் என்பதில் நம்பிக்கை கொண்டது. ஆதி கால மக்கள் அனைவரும் சமய வேறுபாடுகளின்றி இயற்கையை வணங்கினர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். இருக்கு வேதம் சூரியனின் பொன்னான கதிர்களாற்றான் உலகம் வாழ்கிறது என்று கூறுகிறது. அத்துடன் தாவரங்களின் கர்ப்பப்பைக்குள் மக்களுக்கான உணவுகளை வைப்பவன் சூரியன் என்கிறது. சூரிய ஒளியால் நீர் ஆவியாகிச் சென்று முகில்களைக் குளிரப்பண்ணி மழையைப் பெய்விக்கிறது. அத்துடன் சூரியோதயத்தைக் கொண்டே உலக நிகழ்வுகள் கணிக்கப்படுகின்றனவென்றும் கூறுகிறது. இருக்குவேதப் பாடரொன்று சூரியனைப் பற்றி இவ்வாறு கூறுகிறது.

**"சூரியனே உலகை ஆழ்ப்பவன்**
**அவனே எல்லாம் அறிந்தவன்**
**சக்திகள் அனைத்தும் பெற்றவன்**
**அவனே உயிர்களுக்கு ஆசிரியன்**
**உயிர்களுக்குத் தேவையான**

**பொருட்களைப் படைப்பவன்**

**அறிவுப்பசியை ஊட்டுபவன்**

**வயிற்றுப் பசியை நீக்குபவன்**

**தொழில்கள் பலவற்றை உருவாக்குபவன்**

**உலகில் நடைபெறும் நன்மை தீமைகளைக் கண்காணிப்பவன்**

**தீயவர்களைத் தண்டித்து நல்லவர்களுக்கு உதவுபவன்"**

சூரியயோதயத்தைக் கொண்டே உலகின் நடைமுறை கணிக்கப்படுகிறது. இருக்கு வேதத்தில் சூரியனை வரவேற்றுப் பாடும் பாடல் இது

"மக்களே விழித்தெழுங்கள்
வெளிச்சம் வந்து விட்டது
மனதிற்கு ரம்மியமான வெளிச்சம்
புத்திக் கூர்மைக்குரிய பரந்த வெளிச்சம்
இரவின் கொடுமை மறைந்து
இன்பம் பூவுலகைச் சூழ்கிறது
உயிரினங்களே மகிழ்வுடன் வரவேருங்கள்
சொர்க்கத்தின் தேவதை வந்து விட்டாள்
உலகில் உள்ளவற்றைத் தரப்போகிறாள்

கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்”

யசுர் வேதத்தின் சுக்கில யசுர் என்ற பகுதி சூரியனைப் பற்றி இவ்வாறு கூறுகிறது.

“சூரியதேவனே, எமது செல்வம் பசுக்கள். நீதான் அவற்றைப் பாதுகாத்துத் தரவேண்டும். அவற்றையும் எம்மையும் உன் கதிர்களான கண்களாற் பார்த்துக் கொண்டிருக்கிறாய். அதனால் எல்லா நன்மை தீமைகளும் உனக்குத் தெரியும். அத்துடன் அவற்றிற்கும் எமக்கும் உணவும், இன்பமும் தருபவன் நீ. எமக்கும் பசுக்களுக்கும் நோய்கள் எதுவும் வராமல் பாதுகார்.”

அதர்வண வேதத்தில் உள்ள பிரஸ்ணா என்ற உபநிடதம் உயிர்களின் பிறப்புக்குக் காரணமானவன் சூரியன் என்று கூறுகிறது.

“பிரஜாபதியாகிய பிரமத்தில் இருந்தே உயிர்கள் அனைத்தும் தோன்றின. தனிமையில் இருந்த பிரஜாபதியான பிரமம் படைப்புத் தொழிலைச் செய்வதற்காகப் பல காலம்

தவஞ்செய்தது.அதன்பலனாக இரு பொருட்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று ஆண், மற்றது பெண். இந்த இரண்டு பொருட்களில் ஆண் சக்தி, பெண் வஸ்து. சக்தியான ஆண் சூரியனுடன் தொடர்பு கொண்டது. வஸ்து சந்திரனுடன் உறவு கொண்டது. இந்த இரண்டினது இணைப்பில் தான் உயிர்கள் தோன்றின. இதில் சூரியனது சக்தி தான் இன்றியமையாதது. சூரியனிடம் தான் அறிவு மயமான ஒளிக்கதிர்கள் உள்ளன."

முண்டக உபநிடதம் சூரியனைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

> "பிரமத்தின் தலை அக்கினி. சூரியனும் சந்திரனும் பிரமத்தின் கண்கள். அக்கினி என்பது சூரியன்"

இவற்றையெல்லாம் கற்றுத்தேர்ந்த வள்ளுவர் உலகின் தலைவன் கடவுள் என்று கூறியிருக்க மாட்டார். கடவுளரின் பெயரைக் கூறினால் அன்றுள்ள சமயங்களிடையே பெரும் போர் நிலவும் என்பதற்காக ஆதிபகவான் என்ற சொல்லை வள்ளுவர் பாவித்தார். ஆதிபகவன் என்பது சிவன் என்று இந்து மதங்கள் கூறுகின்றன. ஐந்தொழில்களையும் சிவன் வெவ்வேறு

வடிவம் தாங்கிச் செய்வதாகத் திருமந்திரம் கூறுகிறது. சிவன் உலகையே முதலிற் படைத்ததாகவும் பின்பே உயிர்களைப் படைத்தாகவும் புராணங்கள் கூறுகின்றன. பூமியையும், சூரியனையும் படைத்த பின்புதான், சூரியனைக் கொண்டு மிகுதிப் பொருட்களைப் படைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு தெய்வத்தைப் படைத்தவர் சிவன். அதனால் ஆதியில் படைக்கப்பட்ட சூரியனே ஆதிபகவன் ஆவான்.

## பெய்யெனப் பெய்யும் மழை

சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் உலகில் உள்ள அனைத்துப் பொருட்களின் தன்மைகளையும் வேறெந்தப் புலவர்களும் சொல்ல முடியாதளவிற்குச் சொல்லி விட்டனர். அவர்கள்இயற்கை முழுவதையும் பெண்ணாக உருவகித்தனர். முக்கியமாக நிலம், ஆறுகள், கடல் போன்றவற்றையும் அழகான மலர்களையும் பெண்களாகவே அவர்கள் நினைத்துப் பாடல்களைப் பாடினர். பண்டைய புலவர்கள் ஆற்றை, கடலை, பெண் என்றுசொல்ல வள்ளுவர் ஆற்றையும்,

கடலையும் உண்டாக்கும் மழையைப் பெண் என்று சொல்கிறார்.

வள்ளுவர் சொல்லாதது எதுவும் இல்லை. அதிலும் அவர் பெண்களைப் பற்றிக் கூறாததும் எதுவும் இல்லை. ‘பெண்ணின் பெருந்தக்க யாவுள’ என்ற அடி மூலம் பெண்ணின் பெருமைகள் யாவும் கூறப்பட்டுள்ளன. அடுத்து வள்ளுவர் மழையைப் பற்றி மிகவும் சிறப்பாகக் கூறுகிறார். மழை பெய்வதால் தான் உலகம் வாழ்கிறது. அதனால் மழை தான் அமிழ்தம் என்கின்றார். உண்பவர்களுக்கு உணவாவதோடு, உண்ணும் உணவுகளையும் உண்டாக்கிக் கொடுப்பது மழை என்றும், மழை பெய்யாவிட்டால் உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் பசியால் மடிந்து விடும் என்றும் கூறுகின்றார். இதைவிட மழை பெய்யாவிட்டால் பூமியில் பசும் புற்கள் யாவும் கருகி விடும். அத்துடன் கோயில்களில் பூசை வழிபாடுகளும் நடைபெற மாட்டாது என்றும் கூறுகிறார். இதன் மூலம் மழையின் முக்கியத்துவத்தை விளக்கும் வள்ளுவர் அந்த மழை பெண் என்கிறார்.

குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் மழையைப் போல நிறைவேற்றுபவள் பெண் என்றும்,

அவளால்தான் குடும்பம் இயங்குகிறது என்றும் கூறுகின்றார். இத்தகைய பெண்ணைப் பற்றிப் பல்வேறு குறள்களில் புகழ்ந்த வள்ளுவர் ஒரு குறளில் அப்பெண்ணின் சிறப்பைக் குலைப்பாரா?

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுது எழுவாள்

பெய்யெனப் பெய் யும் மழை"

என்ற குறளுக்கு உரை எழுதிய அனைவரும், 'பிற தெய்வங்களை வணங்காமல் காலையில் எழுந்ததும் கணவனை வணங்கி எழுகின்ற பெண், பெய் என்று சொன்னால் மழை பெய்யும்'என்றே எழுதியுள்ளனர். இதில் கணவனுக்கு நிகராகத் தெய்வம் கூறப்பட்டுள்ளது. மாதா, பிதா, குருவைத் தெய்வமாகக் கொள்ளும்படி சொல்லும் இந்து சமயங்கள், தெய்வங்களைத்தொழுதுவிட்டு அல்லது மேற்கூறப்பட்டவர் -களைத் தொழுதுவிட்டுத் தெய்வத்தையும் தொழுத பின் தமது கடமையைச் செய்யுமாறு சொல்கிறது. மாதா, பிதா, குருவை வணங்குமுன் தெய்வத்தை வணங்கித் தான் பலர் காரியமாற்றுகின்றனர். தெய்வத்தை வணங்காது கணவனை வணங்குவது தான் பெண்களுக்குச்

சிறப்பென்றும், கடமையென்றும் ஒரு மாறுபட்ட குறளை வள்ளுவர் சொல்லியிருக்க மாட்டார். பெண்கள் கடவுளை வணங்கத் தேவையில்லை என்ற கருத்தையே இக்குறள் வலியுறுத்துவதாக உரை எழுதுவோர் கூறியுள்ளனர். பெண்களுக்குப் பாதுகாப்பும், பாராமரிப்பும் செய்பவன் கணவன். இருந்த போதும் புராண இதிகாசங்களில் பிள்ளைகள் இல்லாத கணவனும் மனைவியும் தெய்வத்தைத் தொழுதுள்ளனர். அத்துடன் பெண்கள் கடவுளையும் வணங்கியுள்ளனர். விரதங்களை அனுஷ்டிக்கின்றனர்.

பெண்கள் மழைக்கு ஒப்பானவர்கள் என்பதற்கு ஒரு கதை கூறுகின்றேன். கதிரேசன் ஒரு வறிய விவசாயி. அவரது சகோதரியின் கணவன் பெரும் குடிகாரன். அவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். கதிரேசன் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துத் தனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறான். இதைவிடக் கதிரேசனது பெற்றோரும் கதிரேசனுடன் இருக்கிறார்கள்.

கதிரேசனது சகோதரியின் மகன் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் மிகவும் சிறப்பாகச் சித்தியடைகிறான். அவனைப் பட்டணத்தில் உள்ள

தேசிய பாடசாலையில் உயர்கல்விக்காகச் சேர்க்கப் பாடசாலை நிர்வாகம் பத்தாயிரம் ரூபா கேட்கிறது. கதிரேசனின் சகோதரி தனது மகன் ஊர்ப்பாடசாலையில் படிக்கட்டும் என்று கதிரேசனுக்குச் சொல்கிறாள். தனது பிள்ளைகள் பட்டணத்தில் படிக்கத் தனது சகோதரரின் பிள்ளை கிராமத்தில் படிக்க இருப்பதை நினைத்து மிகவும் வேதனைப்படுகிறான் கதிரேசன். அவனால் உணவை உண்ண முடியவில்லை. கதிரேசனின் மூன்று பெண் பிள்ளைகளும் அவரது மனைவி பூரணியும் ஒரு தங்கச் சங்கிலியை மாறி மாறி அணிந்து கொண்டு வைபவங்களுக்குச் சென்று வந்தனர். அதை எப்படிக் கேட்பது என்று தடுமாறினான் கதிரேசன்.

அன்று இரவு உணவை உண்ணாமல் யோசித்துக் கொண்டிருந்தான் கதிரேசன். பூரணி அவனின் அருகில் வந்து அவனது கையைப் பிடித்து அதில் தனது கையை வைத்து விட்டுப்பின் அதை மூடினாள். கதிரேசன் கையை விரித்தான். அவள் அணிந்திருந்த தங்கச்சங்கிலி கைக்குள் மின்னியது. அவள் சொன்னாள்' "எமது பிள்ளைகள் பட்டணத்தில் படிக்க' உங்களது சகோதரியின் பிள்ளை கிராமத்தில் படிப்பது உங்களைப் போல எனக்கும் கவலையளிக்கிறது. அதனால் இதை விற்றுக் காசைக்

கட்டுங்கள். அடைவு வைத்தால் மீள முடியாது” என்று சிரித்தாள். கதிரேசன் பூரித்துப் போனான்.

பெண் என்பவள் தாய். அவள் கணவனுக்கும் தாயைப் போன்றவள். சிவபெருமானின் சக்தி சிவசக்தி. அந்தச் சிவசக்தி பார்வதி என்ற பெண் என்று பழம் தமிழ் நூல்களும், புராண இதிகாசங்களும் கூறுகின்றன. மனைவி என்பவள் கணவனின் மனநிலையை அறிந்து அவனது தேவைகளைப் பூர்த்தி செய்பவள். அப்படிப் பூர்த்தி செய்வதன் மூலம் கணவனையும், கணவனை நம்பியிருப்போரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். அத்துடன் கணவனும் அவனைச் சார்ந்தவர்களும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் சகல செல்வங்களுடனும் இருக்க உதவி செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் மனைவியானவள் தேவையேற்படும் போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள். இதுவே வள்ளுவனது கருத்தாகும்.

மனைவி ஒத்துழைக்காத குடும்பங்கள் நரக உலகில் தான் வாழ்கின்றன. சொர்க்கமும் நரகமும் மனைவியின் கையில் தான் இருக்கிறது என்று இக்குறளின் மூலம் வள்ளுவர் கூறுகிறார். பூரணியைப் போலக் கணவனின் மனநிலையைப் புரிந்து வாழும்

பெண்கள் மழைக்கு ஒப்பானவர்கள். தேவையேற்படும் போது மனங்கோணாமல் கணவனின் மனநிலையை அறிந்து நடக்கும் பெண், 'பயிர்கள் வாடி இருக்கும் போது இன்று மழை வராதா..? என்று ஏங்கும் விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைய மழை பெய்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் அக்கணவனது மனம் எல்லாக் கருத்துக்களையும் சமயத்திற்கும் இயற்கைக்கும் முரண்படாது கூறிய வள்ளுவர் பெய்யெனப் பெய்யும் மழைக்கு முரணான கருத்தைக் கூறியிருக்க மாட்டார். பெண்ணானவள் கணவனின் மனநிலையை அறிந்து நடந்தால் கணவனது கமத்தில் தேவையேற்படும் போதெல்லாம் மழைபெய்து அவனை மகிழ்ச்சிக்குட்படுத்தும்.

# நிலமகளும் மனைமகளும்

சைவசமய நூல்களும், தமிழில் எழுந்த நூல்களும் (சமணநூல்கள் உட்பட) பெண்களைப் புனிதர்களாக வர்ணித்து அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், இரக்கமுள்ளவர் -களாகவும் பொறுமை உள்ளவர்களாகவும் அன்புள்ளம் கொண்டவர்களாகவும் வாழ வேண்டும் என்றுகூறி, இயற்கையின் முக்கியமான பொருட்களையெல்லாம்

பெண்ணாக உருவகித்துள்ளன. பூமி, ஆறு, கடல், போன்றவற்றைத் 'தாய்' என்று கூறியுள்ளன. சமணசமயப் பெரியாரான அரையனார் என்பவர் தான் எழுதிய பழமொழி 400 என்ற நூலில் தான் கூறிய ஒழுக்கக் கருத்துக்களைப் பெண்கள் பின்பற்ற வேண்டும் எனக் கருதி பெண்களுக்கே உபதேசிக்கிறா்.

கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையை அருச்சுனனுக்கு உபதேசித்தது போல அரையனார் பெண்களுக்கு உபதேசிக்கிறார். அப்படி உபதேசிக்கும் போது பெண்களின் அழகைப் பற்றி மிகவும் சுவையாகக் கூறி, அதன் பின்பே தான் கூற வேண்டிய ஒழுக்கக் கருத்துக்களைக் கூறுகிறார். இந்தளவில் முக்கியத்துவம் பெற்ற பெண்களைப் பற்றியும் அவர்களது அழகுபற்றியும் வள்ளுவரைவிட வேறு எந்தத் தமிழ்ப்புலவரும் சிறப்பாகக் கூறியதில்லை. வள்ளுவர் பெண்களிடத்திலிருந்து எவ்வாறு இன்பத்தைப் பெறலாம் என்று காமத்துப் பாலில் மட்டும் கூறவில்லை. அறத்துப் பாலிலும் பொருட்பாலிலும் உள்ள சில குறள்களில் காமத்துப் பாலைவிடச் சிறப்பாகக் கூறியுள்ளார். அதற்கு உதாரணமாக உழவு என்ற அதிகாரத்தில் உள்ள ஒரு குறளைச் சொல்லலாம்.

நிலத்திற்குரியவனான விவசாயி நாள் தோறும் தான் பயிரிட்ட நிலத்திற்குச் சென்று அதை உற்று நோக்கி அதற்கு வேண்டியவற்றைச் செய்யாது சோம்பியிருப்பானேயானால், அவனது மனைவியைப் போல, அந்த விவசாய நிலமும் அவனை வெறுத்துப் பிணங்கி ஒதுக்கிவிடும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

'ஒரு கணவன் தனது மனைவியைத் தினமும் உற்று நோக்கி அவளது தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அன்பு கொண்ட மனைவி தனது கணவனைத் துன்பப்படுத்த விரும்பாது தனது தேவைகளை மனதில் அடக்கி வைத்திருப்பாள். கேட்கவும் மாட்டாள். கணவன் கேட்டாலும் சில சமயங்களிற் சொல்லவும் மாட்டாள். அதனால் கணவன் தினமும் அவளை உற்று நோக்கி அவளின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்தல் வேண்டும். நோக்கலில் தான் காதல் அடங்கியுள்ளது என்று கூறும் வள்ளுவன் உற்று நோக்கலில் மூலம் மனதில் உள்ளவற்றை அறிந்து கொள்ளலாம் என்று கூறுகிறார்.

மனைவியைப் போல விவசாயி தனது நிலத்தைக் கவனிக்க வேண்டும் என்பது விஞ்ஞானபூர்வமான கூற்று. விளைநிலத்தைத் தினமும் உற்றுநோக்கி அதிலுள்ள

குறைபாடுகளை நீக்கா விட்டால் விளைநிலம் அழிவதோடு நட்டத்தையும் ஏற்படுத்தும். கட்டாக்காலி மிருகங்கள் மேயலாம், பயிரில் புழுக்களின் தாக்கம் இருக்கலாம். நோய்கள் உண்டாகி இருக்கலாம். இவற்றை உற்று நோக்கி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கா விட்டால் பயிர்கள் அழிந்து விடும்.

இது எல்லாத் தொழிலுக்கும் பொருந்தும். ஒரு பண்ணையில் ஆயிரக்கணக்கான விலங்குகள் இருக்கலாம். பண்ணைக்குரியவன் தினமும் உற்று நோக்காவிட்டால் ஒரு மிருகத்திற்கு வரும் நோய், எல்லா மிருகங்களையும் அழித்து விடும். பகவத்கீதை ‘சந்திரனது ஒளியால் பயிர்கள் செழித்து வளரும் என்று கூறியதை அறிந்த ஓர் அரசன் விவசாயிகளைச் சந்திரனது ஒளியுள்ள இரவு வேளைகளில் நீர் பாய்ச்சுமாறு அறிவித்தான். இது ஆரம்பத்தில் பலருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நீர் பாய்ச்சத் தொடங்கியதும் கணவனும் மனைவியும், காதலனும் காதலியும் சேர்ந்து விளைநிலங்களில் வேலை செய்தனர். நாளடைவில் அவர்கள் கூடிப் பெரும் இன்பத்தை அனுபவித்ததால் பின்பு இரவு வேளைகளில் விளைநிலங்களில் வேலை செய்ய விரும்பினர்.

சங்க காலத்தில் காதலர்கள் இரவில் சந்திப்பதை ஒழுக்கக் கேடாகப் புலவர்கள் கருதவில்லை. பெரும் புலவர்களான நக்கீரர், பரணர், கபிலர், ஔவையார் போன்றவர்கள் இரவில் காதலர்கள் சந்தித்துக் கூடி மகிழ்வதைப் பற்றிப் பல பாடல்களைப் பாடியுள்ளனர். ஆகையால் பயிர்செய்வோர் தனது மனைவியைப் போல தாம் பயிர்செய்யும் நிலத்தையும் கவனித்தல் வேண்டும் என்று 2000 வருடங்களுக்கு முன் வள்ளுவர் கூறியது இன்றும் அல்ல என்றும் பொருந்தும். அந்தக் குறள் இது.

**“செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்.”**

## காளமேகமும் கவிராயரும்

இயற்கையையும், தெய்வங்களையும், அரசர்களையும், மனிதர்களையும் பற்றி உள்ளபடி பாடும் புலவர்கள் பலர் சங்க காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். மேற் சொன்னவற்றை புகழ்ந்து பாடும் புலவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். இதை விட இவற்றை இகழ்ந்து பாடுவது போலப்பாடி, புகழ்ந்து பாடும் புலவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள்.

இகழ்ந்து பாடுவது போலப்பாடி புகழ்வதென்பது மிகவும் கஷ்டமானதொரு செயல். இத்தகைய கவிகளைப் பாடுவதில் காளமேகப்புலவர் வல்லவர். இவரைக் கண்டால் அரசனும் பயப்படுவான். அரசனின் நடத்தை பிடிக்காது போனால் உடனே அவர் வசைபாடி விடுவார்.

தமிழ் நாட்டிலே திருமலையரான் பட்டினம் என்னும் ஊரினைத் தலைநகராகக் கொண்டு திருமலைராயன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் நீதி நெறி தவறாது ஆண்டு வந்தமையினால் மாதம் மும்மாரி பொழிந்தது. மக்கள் பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். திருமலைராயன் தன்னை நாடிவரும் புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும் பொன்னும் பொருளும் வாரி வாரிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

இதை அறிந்த காளமேகப் புலவர் தனது வறுமையைப் போக்கத் திருமலைராயனின் அரண்மனைக்குக் கால்நடையாகச் சென்றார். வெகுதூரம் நடந்து சென்றமையால் இவர் மிகவும் களைப்புற்றார். திருமலைராயனின் அரண்மனையில் அறுபத்து நான்கு புலவர்கள் இருந்தனர். இவர்கள் எங்கு சென்றாலும் அரசனைப் போலப் பல்லக்கிலேயே சென்று வந்தனர்.

இதனால் இவர்களைத் "தண்டிகைப் புலவர்கள்" என்று அழைப்பார்கள். அரசனை இவர்கள் புகழ்வதால் அரசன் இவர்களை மதித்துப் போற்றிப் பரிசுகள் அளித்துக் கௌரவிப்பான். அரசனது செல்வாக்கைப் பெற்ற புலவர்கள் அகங்காரம் கொண்டு சபைக்கு வரும் புலவர்களைக் கேலி செய்தும், அவமதித்தும் வந்தனர்.

திருமலைராயனின் அரண்மனைக்கு வந்த காளமேகத்தை இவர்கள் கண்டு கொள்ளவே இல்லை. செருக்குடன் அவரைப் பார்த்து "நீரும் புலவரா?" என்றனர்.

இவர்களது நடத்தையையும் வார்த்தைகளையும் பிடிக்காத காளமேகம் பாட்டால் பதில் சொன்னார்..

**"வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு**
**காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே – சாலப்**
**புவியராயர் போற்றும் புலவீர்கா ணீவிர்**
**கவிராயர் என்றிருந்தக்கால்".**

"மன்னரால் போற்றப்படும் புலவர்களே, நீங்கள் கவிராயராக (குரங்குகளாக) இருப்பதாகக் கூறிக் கொள்கிறீர்கள். அப்படியானால் உங்களது

வால்கள் எங்கே போயின? உங்கள் நீண்ட வயிறு எங்கே? முன்னிரண்டு கால்கள் எங்கே? உட்குழிந்த கண்கள் எங்கே? இவை யாவும் ஒருங்கே அமைந்திருந்தால் தான் நீங்கள் கவிராயர்கள் என்று உலகம் ஒப்புக் கொள்ளும்" என்றார்.

சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. தமிழில் உள்ள ஒரு சொல் பல அர்த்தங்களைக் கொண்டது. அதை நன்கு புரிந்தவர் காளமேகம். கவிராயர் என்ற சொல் பெருங் கவிஞர்களையும் குறிக்கும். குரங்கையும் குறிக்கும். வசைபாடுவதில் வல்லவரான காளமேகம். கவிராயர் என்ற வார்த்தையை வைத்துத் திமிரால் தமிழ்ப் புலவர்களை அவமதித்த தண்டிகைப் புலவர்களின் திமிரை அடக்கினார்.

இவரது பாடல்கள் எப்பொழுதும் கேலியும், நையாண்டியும் கலந்தவையாக இருக்கும். அதன் பின் அரச சபைக்குக் காளமேகம் வந்திருக்கிறாரென்றால் அரச சபை மிகவும் அவதானமாக இருக்கும்.

இகழ்ந்து பாடுவதில் காளமேகம் தேர்ச்சி பெற்றிருப்பதைப் போலப் புகழ்ந்து பாடுவதிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். இஞ்சிக்குடி என்ற ஊரிலே கலைச்சி என்றொரு தாசிப் பெண் இருந்தாள். அவள் மிகுந்த அழகி. அதனால் அந்நாட்டிலுள்ள பெரும் பெரும் செல்வந்தர்கள் அவளது கடைக்கண் பார்வைக்காக ஏங்கிக் கொண்டிருந்தனர். அவள் திமிருள்ளவளாக நடந்து கொண்டாள். காளமேகப் புலவர் மீது பொறாமை கொண்ட புலவர்களும் தம்மைப் புகழ்ந்து பாடாமையால் சினம் கொண்ட தனவந்தர்களும் தாம் நேரில் காளமேகத்தைப் பகைக்க அஞ்சி, கலைச்சி மூலமாகப் புலவரை அவமானப்படுத்த விரும்பினர்.அதனால் கலைச்சி பெரும் அவமானமடைந்தாள்.

# சதவிகரத்தால் அழிந்தோர்

பெண்களைப் பற்றிப் பாடாத புலவர்கள் இல்லை. பெண்களைப் புகழ்ந்து பாடிப் புகழ் பெற்றவர்கள் பலர். பெண்களை இகழ்ந்து பாடிப் புகழ் பெற்றவர்கள் பலர். பெண்களைக் கேலி செய்தும் புகழ்ந்தும் பாடிய புலவர்கள் பலர். இந்த வகையில்

காளமேகப் புவலர் இறுதியாகக் கூறப்பட்ட விடயத்தில் மிகவும் புகழ் பெற்றவர்.

ஒரு பெண்ணைப் பலர் விரும்புகிறார்கள். இதனால் அவர்களுக்குள்ளே பெரும்பெரும் பிரச்சினைகள் உருவாகின்றன. ஒவ்வொருவரும் அவள் தன்னைத்தான் விரும்புகிறாள் என நினைத்து அவளின் பின்னால் நாயாய் அலைகிறார்கள். ஒவ்வொருவரின் போக்கும் மற்றவர்களுக்குத் தெரிய வருகிறது. தனது காதலியை மற்றவர்கள் வலுக்கட்டாயமாகக் காதலிக்கிறார்கள் என்றே ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். இதனால் சிறுசிறு சச்சரவுகள் தோன்றுகின்றன. அது பெரும் சண்டையாக மாறிக் கொலையில் முடிகின்றது. அந்தக் கொலையைக் கண்டு துன்பப்பட்ட காளமேகப் புலவர் அவர்களது அறியாமையைக் கண்டு இரங்கிப் பாடிய செய்யுள் இது.

**“வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்**

**கோல முடி மன்னர் குறைந்ததுவும் - சால**

**மதியுடைய நூற்றொருவர் மாண்டதுவுமையோ**

## சதவிகரத்தால் வந்த வாழ்வு”

பெண் நல்ல அழகி. நல்ல சிவந்த நிறம். களங்கமில்லாத கவர்ச்சியான முகம். துடிப்பான விழிகள். அகலமான நெற்றி கருமையான நீண்ட கூந்தல். அது இடை வரை நீண்டு கொண்டிருந்தது. நீண்ட மெலிதான கைகள். அவளின் அழகு தான் கொலைவெறியை உண்டாக்கியதெனக் கவிஞர் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார். அதற்காக அவர் முன்பு நடைபெற்ற பெரும் சரித்திரங்களைக் கூறுகிறார்.

மகாவிஷ்ணு மூன்று அடிகளால் உலகை அளந்தது போல, புலவர் நான்கு அடிகளால் உலகில் பெண்களால் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றிச் சுவையாகக் கூறுகிறார்.

இராமாயண காவியத்தில் வாலி தனது தம்பியான சுக்கீரவனின் மனைவி மேல் மோகம் கொண்டு அவளைக் கடத்தி வந்து தன்னை மணம் புரியமாறு வற்புறுத்திச் சிறையில் அடைத்து வைத்திருந்தான். இதனால் மனம் வருந்திய சுக்ரீவன் இராமரிடம் முறையிட இராமன் வாலியைக் கொன்று

சுக்ரீவனின் மனைவியை மீட்டுக் கொடுத்தார். இலங்கையை ஆண்ட பெரும் மன்னனும் பெரும் சிவபக்தனுமான இராவணன் சிவனிடம் அரியவரங்கள் பல பெற்ற ஒரு பராக்கிரமசாலி. அவனை மூவுலகிலுமுள்ள எவராலும் வெற்றி கொள்ள முடியாது. அப்படியானவன் சீதை மேற் கொண்ட மோகத்தால் அழிந்தான். இதை விடப் பலமும் வரங்களும் பெற்ற பல அரக்கர்களும், அழகிய முடிமன்னர்களும் பலரும் போரிலே வெட்டுண்டு இறந்ததும் பெண்களாலே தான். அறிவினையுடைய கௌரவர்களான நூறு பேரும் கொடையிற் சிறந்த கர்னனும் மாண்டதும் பெண்ணாலே. அவர்கள் திரௌபதியின் துயிலை உரிந்தமையால் அழிந்தனர். இவர்களை விட இந்திரன், சந்திரன் முதலான தேவர்களும் அழிந்தது பெண்களாலே. ஐயகோ இந்தப் பெண்களால் மாண்டவர்களின் தொகை கணக்கிலடங்காது என்று புலம்பி அறிவுரை கூறுகிறார் புலவர்.

கௌரவர்கள் நூறு பேர். ஆனால் புலவர், துரியோதனாகிய நூற்றியொருவர் என்று அவர்களுடன் சேர்ந்து அழிந்த பெரும் கொடை வள்ளலும் தர்மவானுமான கர்னனையும் சேர்த்துக் கூறுவது கர்னனும் பெண்ணால் அழிந்தான் என்பதை உலகிற்குக்

காட்டவே. வலிமையும், வல்லமையும் உள்ள அரக்கர்கள் பலா் அழிந்ததும், அழகிய முடி மன்னா் பலா் போரிலே வெட்டுண்டு மாண்டதும், அறிவினை உடையவரான துரியோதனன் உட்பட நூற்றியொரவா் மாண்டதும் சதவிகரத்தால் என்று புலவா் கூறுகிறாா். சதிவி கரம் என்பது பிறரது மனைவி மேல் கொள்ளும் காமமாகும். அத்துடன் ஒரு பெண்ணைப் பலர் அவளின் அழகு காரணமாக மோகிப்பதால் உண்மையான நிலையை எவரும் உணா்வதில்லை. பெண்ணின் மனதை அறிந்து கொள்வது மிகவும் சிரமமானது. அவளின் நடத்தைகளைக் கொண்டே ஒவ்வொருவரும் அவள் தன்னைத் தான் விரும்புகிறாள் என்று நினைக்கிறாா்கள். அதனால் அவளின் பின்னே சென்று அவளின் அழகை ரசிக்கிறாா்கள். அவளது உடலமைப்பு நடையுடை பாவனைகள் ஒவ்வொருவரையும் கவா்ந்ததால் அவா்கள் ஒவ்வொருவருக்கும் அவள் தேவைப்படுகிறாள். இதனால் உண்டாகும் போட்டி மற்றவா்களை அழிக்குமளவிற்கு வந்து விடுகிறது.

# பெண்களைச் சுமப்போர்

“மனிதர்கள் கஷ்ரப்பட்டவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டும். இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லக் கூடாது. ஆனால் மதிசூதனன் கோயிலுக்குக் கூடக் கொடுப்பதில்லை. இதனால் நீ வாழ்க்கையில் மிகவும் கஷ்ரப்படுவாய். காதலிப்பதைத் தவறு என்று சொல்லமாட்டேன். காதலிப்பவர்கள் நல்ல குடும்பத்தவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவுபவர்கள் தான் தம் குடும்பத்தையும் நல்லபடி கவனிப்பார்கள். பிறரின் கஷ்டநஷ்டங்கள் தெரியாதவர் தமது குடும்பத்தவர்களின் கஷ்ரங்களையும் உணரமாட்டார்கள். நீ வசதிகளுடன் வாழ்ந்து பழக்கப்பட்டவள். இரப்பவர்களுக்குக் கொடுத்து உதவுபவள். அவனுக்கு வாழ்க்கைப்பட்டால் உன்னால் யாருக்கும் உதவ முடியாது. அதற்காகத் தான் சொன்னேன்” என்றார் அர்ச்சகாவின் தந்தை செல்வேந்தர்.

“அப்பா ஒழுக்கமுள்ள பெண்ணால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. நான் எனது கணவனைச் சமூகத்துக்கு உதவி செய்பவராக மாற்றுவேன்” என்றாள்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால்,**
**உள்ளதென் இல்லவள் மானாக்கடை”**

என்று இல்லாளைப் பற்றி வள்ளுவர் கூறியுள்ளார். மனைவி மாண்புடையவளானால் கணவனையல்ல, கடவுளையே மாற்றுவாள் என்பது எனக்குத் தெரியும். எனது செல்ல மகள் நீ. உனது விருப்பத்தை பூர்த்தி செய்யாமல் விட எனக்கு விருப்பமில்லை. இனி உனது திறமை” என்றார். செல்வேந்திரன்.

இருவரது திருமணமும் மிகவும் விமர்சையாக நடைபெற்றது. நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. செல்வேந்திரன் சொத்துக்கள் அனைத்தையும் தனது மகளின் பெயரிலும் மருமகனின் பெயரிலும் எழுதி வைத்து விட்டார். மதிசூதனன் தனது சொத்தையும் தனது மகனது சொத்தையும் கணக்கிட்டுப் பார்த்து பெரு மகிழ்வு கொண்டார். மதிசூதன் தனது மகனை அழைத்துச் சொன்னார்’ “மகனே, செல்வேந்திரனிடம் பெரும் சொத்திருந்தது. அதில்

பெரும் பகுதியை அவர் தான தர்மஞ் செய்து அழித்து விட்டார். நீ சொத்து வந்து விட்டதென்று நினைத்துத் தானதர்மம் செய்யாதே” என்றார்

“அப்பா இது அர்ச்சகாவின் சொத்து. அதை அவள் விரும்பியவாறு செலவு செய்யட்டும். நான் உழைத்து அவளைக் காப்பாற்றுவது தான் அறம். அதைத் தான் நான் செய்யப் போகிறேன்” என்றான் ஆதவன்.

ஆதவனுக்குத் தகப்பனின் போக்குப் பிடிப்பதில்லை. அர்ச்சகா காதலிக்கும் போது அவனுக்குத் தர்ம உபதேசங்கள் பலவற்றைச் செய்து வந்தாள். அவளின் அழகும், அங்கங்களின் பொலிவும், வசீகரமான பேச்சும் அவனைக் கவர்ந்தன. திருமணமான பின் அவள் கொடுத்த இன்பம் அவனை எதையும் சிந்திக்கவிடவில்லை. இது மதிசூதனனுக்குப் புரிந்தது. பெண்ணின் மயக்கத்தில் உள்ளோர் பெண் சொல்வதையே கேட்பார்கள் என்று அவருக்குத் தெரியும். ஒரு நாள் செல்வேந்திரன் மதிசூதனனுக்குச் சொன்னார்’ “மதிசூதனா, எனது மனைவியினுடைய அழகை, அங்கங்களின் பொலிவை விட அவளது பண்புகள் தான் என்னை ஆட்டிப்படைக்கின்றன.

என்னால் அவளில்லாமல் இருக்க முடியாது. அத்துடன் அவளது வேண்டுகோள்களையும் நிராகரிக்க முடியாது. இதைப் பற்றி காளமேகம் என்ற புலவர் மிகவும் சுவையாகக் கூறியுள்ளார். அப்பாடலைச் சொல்கிறேன் கேள்”

**“இந்திரையை மார்பில் வைத்தான் ஈசன் உமையையிடத்**

**தந்தி பகலமைத்தான் அம்புபத்தோன் - கந்தமிகு**

**வெண்டாமரையிலே வேண்டிவைத்தா னாவிலுல**

**குண்டுமிழ்ந்த தாமரைக்கண் ணோன்”**

இந்திரையாகிய திருமகளைத் தனது மார்பிலே வைத்திருக்கிறான் ஈசனான சிவனோ, உமையைத் தனது இடப் பாகத்திலே இரவு பகலாக வைத்திருக்கிறான். தாமரையில் வாசஞ் செய்யும் பிரமன், கலைவாணியைத் தன் நாவில் வைத்திருக்கிறான். இப்படி நெஞ்சிலும், இடப் பக்கத்திலும், நாவிலும் பெண்களை வைத்துக் கடவுள்களே இராப்பகலாகச் சுமக்கும் போது மனிதர்களாகிய நாம் எம்மாத்திரம் குடும்பத்திற்குரிய நற்பண்புகளை நாம் பெண்களுக்குக் கற்பித்தால்,

அவர்கள் தம் கணவர்களைப் பெருமையுடன் வாழ வழி வகுப்பார்கள்.”

மகனின் மனமாற்றம் செல்வேந்திரனது மகளான அர்ச்சகாவால் வந்தது என நினைத்தார் மதிசூதனன்.

---

# ஈ ஏற மலை குலுங்கும்

**எ**ச்சொல்லையும், தமக்குச் சாதகமாக்கி அதை பொருள் உள்ளதாக்கி அறிஞரை ஏற்கப் பண்ணும் அறிவு பண்டைய காலத்தில் வாழ்ந்த புலவர்களிடம் இருந்ததை நாம் பழைய நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். கம்பர், சோழ மன்னனின் சபையில் இருந்த போது மிகவும் வறுமைப்பட்ட குடியானவன் ஒருவன் ஒரு செய்யுளை எழுதிக் கொண்டு அவைக்கு வந்தான். அவனைப் பார்த்தால் பல நாட்கள் உணவு உண்ணாதவனைப் போலிருந்தது. அவனது தோற்றத்தைப் பார்த்தே அவையோர் சிரித்தனர். அவன் கூனிக்குறுகி நின்றான். அவையில் உள்ள ஒரு

தலைக்கனம் பிடித்த புலவர்' "உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரனைப் போல இருக்கிறாய். பிச்சை வாங்க வந்தால் மக்களுடன் சென்றமர்" என்றார். சபையில் இருந்த புலவர்கள் கை கொட்டிச் சிரித்தனர்.

கம்பருக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அத்துடன் அறிவில்லாத பலர் செல்வாக்காலும் செல்வத்தாலும் தம்மைப் பெரிய அறிவாளிகளெனக் கூறிக் கொண்டு அவையில் இருந்து, வருவோர் போவோரைக் கேலி செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்த கம்பர் அவனைப் பார்த்து, "புலவரே, அறிவில் சிறந்த பல புலவர்கள் மிகவும் ஏழைகளாக இருப்பதை நான் அறிவேன். எங்கே நீர் கொண்டு வந்த செய்யுளைப் படியும்" என்றார். கம்பர் சொன்னதைக் கேட்ட அந்தக் குடியானவனுக்குத் தைரியம் பிறந்தது.

**"மண்ணுண்ணி மாப்பிளையே**
**கவியறையே குயிலறையே,**
**உங்கப்பன்**
**கோயிற் பெருச்சாளி, கன்னா**
**பின்னா மன்னா சோழங்கப்**
**பெருமானே"**

எனப் பாடியுள்ளான். அவையில் பெருஞ் சிரிப்பொலி எழுந்தது. ஒரு புலவர் எழுந்து, மூடனே சிறுபிள்ளைகள் கிறுக்கியதைப் போல உள்ளது உனது செய்யுள். எங்கே பொருளைச் சொல் பார்ப்போம்" என்றார்.

அக்குடியானவன் நடுநடுங்கினான். அவனது மனைவி தினமும் ' "அரச சபைக்குச் சென்று அரசரைப் புகழ்ந்து பாடி பொற்காசு பெற்றுவா" என்று சொல்வாள். அவளது கரைச்சலைத் தாங்க முடியாது அவன் வீதியால் செல்லும் போது சிறுவர்கள் மண் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் மண்ணால் ஒரு பாவைப் பிள்ளை செய்து, "மண்ணுண்ணி மாப்பிளையே..." என்று பாடினான். அதை அந்தக் குடியானவன் எழுதிக் கொண்டு அப்பாற் சென்றான். அங்கே ஒரு ஆசிரியர் தனது மாணவர்களுக்கு செய்யுளைக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் அச் செய்யுளில் உள்ள ஒரு விசயத்தைச் சொல்லி "கவியறையே குயிலறையே ..." என்று அதற்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அதை எழுதிய குடியானவன் அப்பாற் சென்றான். வழியில் ஒருவன்: 'உங்கப்பன் கோயிற் பெருச்சாளி' என்று யாரையோ

ஏசினான். அதையும் எழுதிக் கொண்டு அப்பாற் சென்றான். ஒரு மர நிழலில் ஒருவர் இருந்தார். அவருக்கு தனது விருப்பத்தை அவன் சொல்ல, அவர் சொன்னார், “கன்னா பின்னா மன்னா” என்று எழுது’ என்றார். அதையும் எழுதிக் கொண்டு வீட்டுக்கு வந்த குடியானவன் தான் எழுதியதைத் தனது மனைவிக்குக் காட்டினான். அவள் சொன்னாள்’ “செய்யுள் நன்றாக இருக்கிறது. ஆனால் யாரைப் புகழ்ந்துரைக்கிறீர்கள் என்று எழுதவில்லை. அதனால் இறுதியில், “சோழங்கப் பெருமானே என்று எழுதுங்கள்” என்றாள். அவன் அதையும் எழுதியிருந்தான்.

சபையில் எழுந்த சிரிப்பையும், கேலிப் பேச்சுக்களையும் கேட்கக் குடியானவனுக்குப் பயமாக இருந்தது. அப்பொழுது கம்பர் எழுந்து’ “ஏன் சிரிக்கிறீக்கள்?” உங்களுக்குப் பொருள் விளங்காவிட்டால் அது சிறப்பான பொருளைத் தரும் செய்யுள் இல்லையா?” என்று கேட்டார். சபை உடனே அடங்கியது. கப்பர் சொன்னார்’ “மிகவும் அருமையான பொருளை உடைய செய்யுள் இது. இதை விடச் சிறப்பாக யாரும் சோழனைப் புகழ முடியாது. மண் உலகம் முழுவதற்கும் தலைவனே, நீ கவிதைகள் புனைவதில் வல்லவன். உனது குரல் குயிலின் குரலை

விட இனிமையானது. உனது தந்தையார் கோயில்கள் பலவற்றைக் கட்டி மானியங்கள் வழங்கியவர். அதை நீ இப்போதும் செய்கிறாய். கன்னனுக்குப் பின் வந்த பெரும் கொடைவள்ளலான சோழ அரசின் பெருமகனே" என்று பொருள் சொல்ல அதை விளங்காது சிரிக்கும் நீங்கள் தான் மூடர்" என்றார் கம்பர்.

அந்தக் குடியானவனுக்கு அரசன் பொன்னும், பொருளும் கொடுத்துக் கௌரவித்தான். இது போல ஒரு சம்பவம் காளமேகப் புலவர் இருந்த அரச சபையிலும் நடந்தது. அரசன் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான். மந்திரிக்குப் புலவர்களைப் பிடிக்காது. புலவர்களைப் பற்றி எந்நாளும் அரசனுக்குக் குறை கூறியபடியே இருப்பான். அன்று மந்திரி சொன்னார்."அரசே, புலவர்கள் தாம் நினைத்தவற்றைப் பாடி பரிசுகள் பெறுகிறார்கள். இதை விடுத்து நீங்கள் நினைப்பதைப் பாடச் சொல்லுங்கள்" என்றான்.

அரசருக்கு அவன் கூறியது புரியவில்லை. அதனால் அவரைப் பார்த்தார். அவன் சொன்னான்' "அரசே, ஈயேற மலை குலுங்கியது' என்ற பொருளில் பாடலைப் பாடச் சொல்லுங்கள்".

புலவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது. அவர்கள் திகைத்துத் திகிலடைந்து போயிருந்தனர். காளமேகம் எழுந்தார். அவருக்குச் சிரிப்பு வந்தது. கண்ணனின் லீலைகளை நினைத்தார். ஒரு முறை கண்ணன் வெண்ணெய் திருடி மத்தால் அடி வாங்கிய சம்பவம் அவரது நினைவுக்கு வந்தது.

**"வாரணங்கள் எட்டும் மகமே ருவுங் கடலும்**
**தாரணியும் எல்லாம் சலித்தனவால் - நாரணனைப்**
**பண்பாய் இடைச்சி பருமத்தி னாலடித்த**
**புண்வாயில் ஈ மொய்த்த போது"**

ஆயர் பாடியில் மகாவிஷ்ணு கண்ணனாக அவதரித்திருந்த போது குறும்புகள் பலவும் செய்வார். ஒரு நாள் கண்ணன் இடைச்சியின் வீட்டுக்குச் சென்று அவள் கடைந்து வைத்திருந்த நெய்யைத் திருடி உண்டான். அதைக் கண்ட இடைச்சி மத்தால் கண்ணனை அடித்தாள். அதனால் அவனது உடலில் புண் உண்டானது. அப்புண்ணின் மீது ஈக்கள் மொய்த்தன. அதனால் கண்ணனது உடல் அசைய

அட்ட திக்குப்பாலகர்களும் மகாமேரு மலையும் ஏழு கடல்களும் ஏழு உலகங்களும் அசைந்தன. மகாமேரு மலை அசைவு கொண்டது என்பதன் மூலம் ஈ ஏற மலை குலுங்கியது என்று புலவர் கூறுகிறார்.

இவ்வாறு புலவர்கள், தாம் நினைத்தவற்றைச் செய்யுள்ளாக்கி அவற்றை இலக்கிய நயம் உள்ளவையாக மாற்றியமைத்தமையைப் பழந்தமிழ் நூல்களில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

# திருமந்திரம் கூறும் மகளிர் இழிவு

ஒவ்வொரு சமயத்திற்கும் சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும் உண்டு. சாத்திர நூல்கள் இறைவனின் இலக்கணங்களைப் பற்றிக் கூறுவன. தோத்திர நூல்கள் மக்கள் இறைவனை வணங்கி முத்தியடையும் வழிவகைகளைக் கூறுவன. இருப்பினும் தோத்திர நூல்கள் கூறுபவற்றையும் சாத்திர நூல்கள் கூறுகின்றன. திருமந்திரம் என்ற நூல் 3000 பாடல்களை உடையது. அது சிவனதும், பார்வதியினதும் இயல்புகளை இலக்கணம் வழுவாது

கூறுவது. திருமந்திரப் பாடல்கள் மிகமிக எளிமையான சொற்களை உடையன. வாசிப்பவர்கள் இலகுவாக அதன் உரையை உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் திருமூலர் என்ற பெரும் ஞானியால் எழுதப்பட்டது. சைவ சமயிகளின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்கள் மகிழ்வுடன் வாழ வேண்டிய வழிவகைகளை மிகவும் சிறப்பாகவும் வற்புறுத்தியும் கூறுவது திருமந்திரம்.

மனிதனை வழிதவற வைப்பதில் பெரும்பங்கு வகிப்பது பெண்களுடனான உறவு. அது போல மனிதனை நல்லவகையில் வாழச் செய்து முத்தியின்பத்தைப் பெறவைப்பதும் பெண்களின் உறவு தான். சங்க கால நூல்கள் பலவும் பெண்களின் குணவியல்புகளைப் பற்றி விதந்து கூறுகின்றன. நற்றினை, குறுந்தொகை, ஆசாரக்கோவை, பழமொழி நானூறு போன்ற நூல்கள் பெண்களின் இழிந்த குணங்களைப் பற்றியும் சிறந்த குணங்களைப் பற்றியும் மிகவும் விரிவாகவும், உண்மையாகவும் கூறியுள்ளன.

சமயநூல்களில் பெரும்பாலானவை பெண்களோடு கூடி அனுபவிக்கும் சிற்றின்பம் தான் ஆண்களையும் சமூகத்தையும் கெடுத்துத் தீயவழிகளில்

அவர்களை வழிநடத்துகிறது என்று கூற, திருக்குறள் ஆண்களை நல்வழிப்படுத்தி அவர்களைச் சமூகத்திற்கு உதவுபவனாக மாற்றி அமைப்பதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்கள் என்று கூறுகிறது. அதேசமயம் திருவள்ளுவர் 'வரைவில் மகளிர்' என்ற அதிகாரத்தில் இழிந்த குணங்களை உடைய பெண்களால் உண்டாகும் தீமைகளைப் பற்றிவிரிவாகக் கூறி, ஆடவர் இழிந்த மகளிருடன் கூடிப் பெறும் இன்பம் இருட்டறையில் இனந்தெரியாத ஒரு பிணத்துடன் கூடி இருப்பதைப் போன்றது என்று கூறுகிறது. தமிழ் மக்கள் படிக்கக் கூடாது என்று தமிழ்ப் பெரியார்கள் ஒதுக்கி வைத்த சில நூல்கள் உண்டு. காமத்தைப் பற்றிப் பேசுதல் கூடாதென்றும், அதைப் பற்றிக் கூறும் நூல்கள் தரக்குறைவான நூல்கள் என்றும் இப்போதும் மக்கள் நம்புகிறார்கள். இதற்கு உதாரணமாகத் திருக்குறளின் இன்பத்துப் பாலை கூறலாம்.

இன்பத்துப்பாலை விரிவாக ஆராய்ந்தவர்கள் அதைத் தான் முதலில் கற்க வேண்டும் என்று கூறுகின்றனர். தேவார திருவாசகங்களில் பெண்களுடன் கூடி இருக்கும் இன்பத்தைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அதைக் கோயில்களில் பூசை நேரங்களில் பாடுகிறார்கள்.

அதைவிடக் கோயிலின் சிற்பங்கள் சிற்றின்பத்தை வலியுறுத்துகின்றன.

சங்ககாலத்தில் வாழ்ந்த பெரும் பெரும் தனவந்தர்களும் நிலச் சுவாந்தர்களும் தாம் காதலித்துத் திருமணம் செய்த பெண்களைக் கைவிட்டு விட்டுச் செல்வத்தையே பொருளாக விரும்பும் பொதுமகளிரின் கீழான இன்பத்தை விரும்பி அவர்களுடன் கூடி இன்பத்தை அனுபவித்தனர், அதனால் தமது பொருள்களையெல்லாம் இழந்து ஓட்டாண்டியாகிப் பின் தமது மனைவி தான் சிறந்தவள் என்று உணர்ந்து திரும்பி வீட்டுக்கு வந்தனர். இத்தகைய கீழானவர்களைப் பற்றிச் சங்க கால நூல்கள் மிகவும் விரிவாகவும் சுவையாகவும் கூறுகின்றன. இதற்கு உதாரணமாகச் சிலப்பதிகாரத்தைச் சொல்லலாம்.

எட்டி மரத்தின் இலை, தளிர், பூ, காய் கனி என்பன மிகவும் அழகானவை. கண்களைக் கவரும் தன்மை வாய்ந்தவை. எட்டி மரத்தின் பழங்கள் பார்ப்பவர்கள் அனைவரையும் மயக்கிக் கவரும் தன்மை வாய்ந்தன. அதை மனிதர்கள் அழகிற்காக இரசிப்பார்கள். ஆனால் பறவைகள் இளைப்பாறுவதற்குக்

கூட எட்டி மரத்தில் இருக்கமாட்டாது. மிருகங்கள் அதைக் கவனிக்காது சென்றுவிடும். எட்டி மரத்தின் பழங்களை அதன் அழகு கருதி உண்பவர்கள் இறந்து விடுவார்கள். இது ஐந்தறிவுள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் தெரியும். அதனால் ஜீவராசிகள் எவையும் எட்டி மரத்தின் பக்கம் செல்வதில்லை.

இது போல மைபூசிய அழகான சுழன்றாடும் கவர்ச்சி மிக்க கண்களையும், காண்போரின் மனதைக் கவர்ந்து, அவர்களின் மனத்திடத்தை அழித்து உணர்ச்சிகளைப் பெருக்கும் புன்னகையை உடைய இழிந்த மகளிரின் மீது ஆசை கொள்ளக்கூடாது. இப்படியான பொய்மையான ஒழுக்கத்தை உடைய மாதர்கள் எட்டிப் பழத்தைப் போலத் தொடர்பு கொள்வோரின் உயிரை அழித்து விடுவார்கள் என்று திருமந்திரம் சொல்கிறது. சங்க காலத்தில் ஒழுக்கம் சீர்குலைந்திருந்தது. அதனால் ஆண்கள் பரத்தைகளின் வீடுகளுக்குச் சென்று தம் பொருட்களையெல்லாம் கொடுத்து அவர்களுடன் உறவு கொண்டு தமது பொருட்களையும், குடும்பத்தையும் அழித்தனர். இந்த வரலாற்றினைக் குறுந்தொகை சுவைபடச் சொல்ல, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் கண்டிக்கின்றன. அது போலச் சைவ சமயத்தின்

சாத்திர நூலான திருமந்திரம் பொய்மை மாதரான தாசிகளின் வீடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்து நன்நெறியில் செல்லுமாறு கூறுகிறது.

சங்க காலத்தில் ஒழுக்கம் சீர்குலைந்தமையால் தான் சமணசமயம் உருவாகி வளர்ந்ததாக அறிஞர்கள் கூறுவர். சங்க காலத்தில் நடந்த ஒரு சம்பவம் இது.

அவன் பெரும் தனவந்தன். அழகிய பெண்ணைக் காதலித்து மணம் புரிந்து ஐந்து பிள்ளைகளைப் பெற்றவன். கோயிலில் நடைபெற்ற ஒரு திருவிழாவில் அவள் நடனமாட வருகிறாள். அவளது ஆடல், பாடல், அழகு என்பன அவனைக் கவர்கின்றன. அன்றே அவன் அவளது வீட்டிற்குச் செல்கிறான். அவனை அவள் மிகுந்த விருப்புடன் புன்னகை தவள வரவேற்கிறாள் அவளின் அழகான கவர்ச்சியான புன்னகை அவனைக் கவர்கிறது. முத்துப் போன்ற பற்களும் அழகான உதடுகளும் அவனது மனதைக் கவர்கின்றன. அவளது முகத்தில் படர்ந்திருந்த காம உணர்வுகள் அவனை மெய்மறக்கச் செய்கிறது. அவளே தஞ்சமென அவளின் வீட்டில் தங்கிவிடுகிறான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அவள்

அவனுக்கு இன்பமளிக்கிறாள். இது வரை மனைவியால் கிடையாத புதிய புதிய இன்பங்கள் அவனுக்குக் கிடைக்கின்றன. நன்கு திட்டமிட்டு அவனின் பொருளின் மீது ஆசைப்பட்டு அவனது பொருள் முழுவதையும் கவரும் நோக்கில் அவள் செயற்படுகிறாள். அவனால் உலகை உணர முடியவில்லை. அவளது அணைப்பில் கிடைக்கும் சுகம் புதியன போலத் தினமும் இருக்கின்றன. மனைவி, மக்கள், தொழில் யாவற்றையும் மறந்து அவளின் அடிமையாகிறான். அதனால் அவனது பொருட்கள் யாவும் அவளின் உடைமையாகின்றன. இறுதியில் பொருளில்லாதவனானதும் அவளால் துரத்தப்படுகிறான்.

இந்த நிலையைப் பெருஞானியும், சித்தருமான திருமூலர் எட்டி மரத்தை உதாரணங் காட்டி, எட்டி மரத்தைப் போன்ற பொய்மை மாதர்மேல் ஆசைவைக்க வேண்டாம் என்று சொல்கிறார். அப்படிச் சொல்லும் பாடல் இது.

**“இலை நலவாயினும் எட்டி பழுத்தால்**

**குலைநல வாங்கனி கொண்டுண லாகா**

**முலை நலங் கொண்டு முறுவல் செய்வார் மேல்**

**விலகுறு நெஞ்சினை வெய்து கொள்ளீரே**”!

# சுழி

‘காயத்திரி’ என்று அந்த ஊரே முணுமுணுக்கும். அவள் வீதியால் நடந்து சென்றால் வீதியில் உள்ளவர்களது கண்கள் யாவும் அவளது முகத்தில் மொய்த்திருக்கும். அந்தளவு அழகானவள் பக்தி மயமானவள். அவள் கோயிலில் சரியைத் தொண்டுகளான கூட்டுதல், கழுவுதல், விளக்கிடுதல் என்பன செய்வாள். அவ்வேளைகளில் அவ்வூர் இளைஞர்கள் தாமும் சரியைத் தொண்டுகள் செய்தவாறு அவளை அன்போடு பார்ப்பார்கள்.அவள் குனிந்த தலை நிமிராது தனது வேலையைக் கவனிப்பாள்.

அரவிந்தன் என்றொரு பெரும் வணிகன் அந்த ஊரில் இருந்தான். அவன் காயத்திரி மீது அளவு கடந்த காதல் கொண்டான். அவனின் தந்தை

காயத்திரியின் தந்தையின் உயிர் நண்பர். அதனால் நல்லதொரு நாளில் அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது.

காயத்திரி அமைதியானவள். கணவனைத் தன் உயிராக நினைப்பவள். அவன் நினைத்தவற்றை நினைத்தவாறு செய்பவள். அதனால் அரவிந்தன் மிகவும் மகிழ்ந்தான். அவளுடன் கூடியிருக்கும் நேரங்கள் அவனுக்கு அமுதாக இனித்தன. அந்த ஊரில் ஒரு பொய்மையான அழகிய பெண் இருந்தாள். அவளுடன் அவ்வூரில் உள்ள தீயவர்கள் கூடி இன்பம் அனுபவித்தனர்.

ஒரு நாள் அரவிந்தன் அவளைத் தற்செயலாகக் கண்டான். அவள் அரவிந்தனை வளைத்து அவனிடம் பொருள்பெற எண்ணிக் காமம் கலந்த புன்சிரிப்பைத் தனது உதடுகளில் தவழவிட்டாள். மயக்கும் தன்மை வாய்ந்த அந்தக் கவர்ச்சியான சிரிப்பு மின்னலைப் போல அரவிந்தனைத் தாக்கியது. சுழன்றாடும் அவளது விழிகள் மயக்கத்தை உண்டு பண்ணின. சிவந்த கன்னங்கள் அவனைச் செயலிழக்க வைத்தன. அவள் அன்பொழுகக் கதைத்தாள். அக்கதையில் காமம் பொங்கி வழிந்தது.

அரவிந்தன் அவளது மயக்க மொழியிலும், கவர்ச்சியிலும் மையல்கொண்டு அவளிடம் சென்றான். ஆரம்பத்தில் அவள் பொருளை நினையாது பெரும் இன்பம் கொடுத்தாள். அந்த இன்பம் காயத்திரி கொடுக்கும் இன்பத்தை விட மேலானது என்று எண்ணினான் அரவிந்தன். சில நாட்கள் செல்ல அவன் ஆசையோடு அவளிடம் சென்ற போது அவள் சோகமாக இருந்தாள். அவளது முகம் கறுத்துச் சுருங்கி இருந்தது. அதைக் கண்ட அரவிந்தன் துடிதுடித்துப் போனான். பலமுறை அவன் அதற்கான காரணத்தைக் கேட்ட போதும் அவள் அதைச் சொல்லாது விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்' "அன்பே, உனது துன்பத்தைச் சொன்னால் தானே என்னால் உதவ முடியும். பயப்படாமல் சொல். என்னவானாலும் நான் செய்வேன்" என்றான் அரவிந்தன்.

அவள் அழுவதை நிறுத்தி விட்டுச் சொன்னாள்' "அன்பானவரே, என்மீது உயிரையே வைத்திருப்பவரே, இந்த வீடு வாடகை வீடு. இதை விற்கப்போகிறார்களாம். விற்றால் நான் எங்கே போவது?" விம்மி விம்மி அழுதாள். அவளது அழுகையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை "எவ்வளவு பணம் தேவை?" என்று

கேட்டான் அரவிந்தன்' "பத்து இலட்சம் ரூபா" என்றாள் அவள்.

'நான் தருகிறேன்' என்றான் அவன். அது அவளது சொந்த வீடு. ஆடவர்கள் மயக்கமுற்றிருக்கும் போது அவள் இப்படியான பொய் வார்த்தைகளைக் கூறி அவர்களிடம் பணம் பெறுவாள்.

பத்துஇலட்சம் ரூபாவை அவளுக்குக் கொடுப்பதற்காக அவன் தனது விவசாய நிலத்தை விற்றான். சில தினங்களின் பின் அவளின் வீட்டுக்கு வந்த அவனது சகோதரன் அரவிந்தனைப் பயமுறுத்தினான்' "நீ இங்கு வருவதை ஊர் முழுவதும் சொல்வேன். நீ எனக்கு நான் கேட்கும் போதெல்லாம் பணம் தரவேண்டும்" என்றான்.

அரவிந்தன் அதை அவளிடம் சொன்னான். அவள் சொன்னாள் ' 'அவன் தீயவன், எனது சொற் கேட்கமாட்டான். நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் சந்தியில் நின்று கண்டபடி கத்துவான்" என்றாள்.

அவனது நண்பன் கூறியது அவனது ஞாபகத்திற்கு வந்தது' "அரவிந்தா அவள் காமப்பேய். ஆரம்பத்தில் இனிக்க இனிக்கப் பேசுவாள். பின் செயலாற்ற ஆரம்பிப்பாள். அவளது குடும்பமும்

அவளுடன் சேர்ந்து பணம் பறிக்கும். உனக்கு அழகான மனைவி உள்ளாள். அவளோடு கூடி அனுபவிக்கும் இன்பம் சுனை நீரில் நீராடுவதைப் போன்றது. விபச்சாரிகள் தரும் இன்பம் சுனைக்குள் இருக்கும் அபாயமான சுழியைப் போன்றது. அதற்குள் அகப்பட்டால் மரண வேதனைதான். அதனால் அவளைவிட்டு விடு"

அரவிந்தன் அவளின் தொடர்பை அறுக்க முயன்றான். முடியவில்லை. அவளும் அவளது குடும்பத்தினரும் அவனைப் பயமுறுத்திப் பொருட்களைப் பெற்று வந்தனர். இப்போது அவனுக்கு அவளை நினைக்கப் பயமாக இருந்தது. தனது வாழ்வு அழிந்து விடுமோ என அஞ்சினான் அரவிந்தன்.

பெரும் சமூகச் சீர்கேடு ஒன்றை மிகவும் எளிமையாகவும் உண்மையாகவும் சமய சாத்திர நூலினூடாகத் திருமூலர் விளக்கியிருப்தைப் போல எந்தப் புலவரும் விளக்கியதில்லை. சமயத்தின் மூலம் சமூகத்தைத் திருத்தும் முயற்சி இது. அந்தச் சீர்திருத்தப் பாடல் இது.

**“மனைபுகு வார்கள் மனைவியை நாடில்**
**சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்**
**கவைது போலக் கசிந்தெழும் இன்பம்**
**நனவது போலவும் நாடெவொண்ணாதே”**

# பிடியென நடையாள்

விபச்சாரத்தைப் பற்றிக் கண்டிக்காத நூல்கள் இல்லை. உலகில் உள்ள எந்தச் சமயமானாலும் பஞ்சமா பாதகங்களில் ஒன்றான விபச்சாரத்தைப் பற்றிக் கண்டிக்கிறது. விபச்சாரம் என்பது தனது மனைவியைத் தவிர்ந்த வேறு பெண்களுடன் கூடி மகிழ்வது’ மகிழ நினைப்பது. விபச்சாரம் செய்யும் பெண்கள் பணத்திற்காக பொருளுக்காக, வேறு நன்மைதரும் செயல்களுக்காக பல்வேறு ஆடவர்களுடன் கூடி மகிழ்வார்கள்.

ஆண்கள் ஒருபொழுதும் தனது மனைவியைத் தவிர்ந்த இன்னொரு பெண்ணை மனதாரற் கூட

நினைக்கக் கூடாது. அத்துடன் இன்னொருவரின் மனைவியை விரும்பக்கூடாது. இத்தகைய பெண்கள் அன்பு காரணமாக ஒருவனை விரும்பாது பொருள் காரணமாகவே விரும்புவார். அவர்கள் பேசுகின்ற இனிமையான வார்த்தைகள் என்றும் துன்பத்தையே தரும்.

கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கேற்ப இனிய வார்த்தைகளைப் பேசுகின்ற விலைமாதர்களின் இனிய வார்த்தைகள் கேட்பவனுடைய குடும்பத்தை அழித்து விடும். பலவீனம் உள்ளவர்கள், அடங்காத காமத்தை உடையவர்கள், பஞ்சமாபாதகங்களை மகிழ்வுடன் செய்பவர்கள் தான் பொதுமகளின் அற்பமான இன்பத்தைச் சொர்க்கம் என்று எண்ணித் தமது பொருள்களையெல்லாம் கொட்டிக் கொடுத்துத் தமது குடும்பத்தவர்களின் முன்னேற்றத்தைக் கெடுப்பார்கள். இத்தகைய பொது மகளின் தன்மைகளைப் பற்றித் திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

**‘இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்**
**புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்**
**மயலுறும் வானவர் சார் விது என்பார்**

## அயலுறப் பேசி அகன்றொழித்தாரே'

கண்களைக் குத்துகின்ற பொலிவும், மிக்க அழகுங் கொண்ட பெண் யானையை ஒத்த இளமையான பெண்கள், மேகம் பொழியும் மழையைப் போல, உடலும் உயிரும் உவகை கொள்ளும்படி தழுவிப் பேரின்பத்தைத் தருவார்கள். அப்படியான பேரின்பத்தைத் தருகின்ற அந்தச் சில கணங்களிலும் அவர்களின் மனம், தான் தழுவியவர் -களிடமிருந்து எதைப்பெறலாம் என்ற நினைவிலேயே இருக்கும். தாம் தினமும் தழுவுவதால் தழுவுபவர் பேரின்பமடைகிறார் என்று அவர்களின் செயல்கள் மூலம் அறிந்தால், விலை மாதர்கள் அவர்களின் பொருட்கள் முழுவதையும் சூறையாடி விடுவார்கள். இதை விடத் தான் தொடர்புகொண்டுள்ளவர்களை விட அதிகமான பொருள் உடையவனைக் கண்டால் அவர்கள் தாழ்ந்த சாதிக்காரர்களாக இருந்தாலும் அவர் தேவர்களைவிட மேலானவர் என்று கூறி அவர்களுடன் உறவு கொள்வார்கள். அவரின் புகழையே பேசுவார்கள். அவரைப் பிரியாது இருப்பர். அவர் பொருளற்றவரானதும் அவரை ஏதோ ஒரு காரணம் காட்டி விலக்கி வைப்பர்.

பெண்களின் அங்கங்களில் உள்ள கவர்ச்சி இளைஞர்களை மட்டுமன்றி வயோதிபர்களையும் தடுமாற

வைக்குமென்று சுமார் 6000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் உணர்ந்திருக்கிறார். அதனால் இளம்பெண்கள் தங்கள் அங்கங்களின் பொலிவைக் காட்சிப்படுத்தக் கூடாது என்கிறார். அன்று இன்றைய பெண்களைப் போலவே தலை முடியை விரித்துவிட்டு அரைகுறை ஆடைகளுடன் பெண்கள் வீதிகளில் உலாவி இருக்கிறார்கள். அதனால் அன்று வாழ்ந்த ஆண்கள் அவர்கள் வெளிக்காட்டிய உடற்கவர்ச்சியில் மயங்கி அவர்களின் பின்பே அலைந்து திரிந்து தம் பொன்னான வாழ்வையுங்கெடுத்து, நோயாளிகளாக, பலவீனர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இதைக் கண்ட திருமூலர் சிவனின் பெருமைகளை விதந்து கூறும் சாத்திர நூலான திருமந்திரத்தில் இழிந்த பெண்களின் நிலையையும் அதனால் ஆடவர்கள் பட்ட துன்பங்களையும் இலக்கியச் சுவையுடன் எடுத்துக் கூறுகிறார்.

# மணற்கேணி

வாழ்க்கைக்கு இன்றியமையாதது கல்வி. இக்கல்வியின் பெருமைகளைப்பற்றிப் பேசாத புலவர்கள் இல்லை. நாலடியார், திருக்குறள் போன்ற நூல்கள் வேறெந்த நூல்களும் கூறாத வகையிற் கூறியுள்ளன.

**"தொட்டனைத்து ஊறும் மணல்கேணி '**
**மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு"**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். பூமியை எந்தளவிற்குத் தோண்டுகிறோமோ அந்தளவிற்கு நீர் சுரக்கும். அது போல, மக்கள் எந்தளவிற்கு நூல்களைக் கற்கிறார்களோ அந்தளவிற்க அறிவு சுரக்கும் என்பது வள்ளுவர் வாக்கு. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு கூறப்பட்ட வேதவாக்கு இது. இதைப்படித்த பின்பும் இங்குள்ள கல்வியலாளர்களுக்குக் கல்வியைக் கற்பிக்கும் முறை தெரியவில்லை. தரம் ஐந்தில் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து, க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் விஞ்ஞான கணித பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்று, க.பொ.த. உயர்தர வகுப்பில கற்கும் போது கணிதம் அல்லது விஞ்ஞானப் பிரிவில் குறைவான

புள்ளிகளைப் பெறும் மாணவர்களை ஆசிரியர்கள் கற்கத் தெரியாத முட்டாள்கள், கல்வியறிவில்லாத மூடர்கள் என்று நினைத்துக் கலைத்திட்டப் பாடங்களை கற்குமாறு வற்புறுத்துகின்றனர். கற்கக் கற்க ஆலமரம் போல வளர்வது கல்வி . பண்டைய ஆசிரியர்கள் மாணவனின் அறிவை வளர்ப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்தனர். மாணவனின் கல்வித் தரத்தை உணர்ந்து அந்தத் தரத்திற்கேற்றவாறு கற்பித்தனர். விளங்காதவற்றைத் திரும்பத் திரும்பக் கற்பித்தனர். மாணவன் ரசித்து ருசித்து மகிழ்ந்து கற்குமாறு கற்பித்தனர். அதனால் மாணவர்கள் தாம் கற்கும் துறையில் பெரும் நிபுணர்களாக இருந்ததாகப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

"கற்காதவனின் அழகிய தோற்றம் மண்ணால் உருவாக்கப்பட்ட அழகிய பொம்மையைப் போன்றது. கல்லாதவனிடம் உள்ள செல்வம், கற்றவரிடம் உள்ள வறுமையை விடக் கொடுமையான துன்பங்களைக் கொடுக்கும். கல்லாதவர்கள் உயர்குடியிற் பிறந்திருந்தாலும் அவர்கள் மிக மிகத் தாழ்ந்தவர்கள். அறிவுமிகுந்த நூல்களைக் கற்றவர்களே மக்களாக மதிக்கப்படுவர். மற்றவர்கள் மிருகங்களுக்குச் சமமானவர்கள். கல்லாதவனின் முகத்தில் இருப்பவை

கண்கள் அல்ல அவை புண்கள். இவ்வாறு வள்ளுவர் கல்லாதவர்களைப் பற்றிக் கூறியுள்ளனர்.

பண்டைய காலத்தில் மிருகங்களுக்கும் கல்வி போதிக்கப்பட்டது. கல்வியைத் தொடர்ந்து போதிப்பதன் மூலம் மனிதர்களை மட்டுமன்றி மிருகங்களையும் நிபுணத்துவ - முள்ளவையாக மாற்றலாம். இன்று பல்வேறு மிருகங்களுக்கும் கல்வி போதிக்கிறார்கள். அவை மனிதர்களை விட அறிவில் மேம்பட்டவையாக இருக்கின்றன. ஆகையால் மாணவர்களின் கல்வித்தரத்தை உணர்ந்து அந்த இடத்திலிருந்து கற்பிக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் வாக்கு. கல்வியைப் பற்றியும் கல்லாமையைப் பற்றியும் திருமூலர் தனது திருமந்திரத்தில் இருபது பாடல்களில் கூறியுள்ளார். சமய வளர்ச்சிக்குக் கல்வி தேவை என்பதை சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் அவர்கள் கல்வியின் பெருமையைப் பற்றியும் கல்லாமையின் சிறுமையைப் பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளனர். கல்லாமை பற்றி திருமூலர் இவ்வாறு கூறுகிறார்.

**“கல்லாத மூடரைக் காணவும் ஆகாது**

**கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று**
**கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்**
**கல்லாத மூடர் கருத்தறி யாரோ.”**

திருமந்திரத்தில் உள்ள 3000 பாடல்களும் மிகவும் இலகுவாகப் பொருள் விளங்குபவை. எழுத, வாசிக்கத் தெரிந்தவர்கள் பாடல்களின் கருத்தை மிக மிக இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். பாரதம், இராமாயணம், திருக்குறள் போன்றவற்றைக் கற்பதற்குக் குருவின் துணை தேவை. ஆனால் திருமந்திரப் பாடல்களிற் சமூகம் சார்ந்த பாடல்களை ஒருவர் தானே படித்துப் பொருளை உணர்ந்து கொள்ளலாம். மற்றைய புலவர்கள் கல்லாமையால் உண்டாகும் இழிவுகளைப் பற்றியும் அதனால் உண்டாகும் கேடுகளைப் பற்றியும் கூறத் திருமூலர் கல்லாத மூடரைக் காணக் கூடாது என்றும், அவரின் முன் எதுவும் பேசக்கூடாது என்றும், அவரில் முழித்து எந்த நல்ல காரியமும் செய்யக்கூடாது என்றும், அவர்கள் மனிதர்கள் அல்ல, அதனால் அவர்களை ஒதுக்கி வைத்தல் வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

சங்க காலத்தில் சாதியில் குறைந்தவர்களை ஒதுக்கி வைத்தனர். ஆனால் திருமூலர் கல்லாதவனைப்

பார்க்கவும் கூடாது, தவறிப் பார்த்தால் பார்ப்பவனுக்குக் கேடுவரும் என்கிறார்.

சுந்தரன் ஒரு பெரும் வர்த்தகன். அவனிடம் நூற்றுக்கு மேற்பட்ட கப்பல்கள் இருந்தன. அந்த நாட்டில் பெரும் தனவந்தன் அவன். அவன் திருமணம் செய்து பல வருடங்கள் கழிந்தும் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் அவன் விரதமிருந்து கோயில் கோயிலாகத் திரிந்தான். அதனால் அவனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. திருணம் செய்து பல வருடங்களின் பின் தவமிருந்து பெற்றமையால் அத்தனவந்தன் தனது செல்ல மகனான ஆரூரனை மிகவும் செல்லமாக வளர்த்தான். தாய் எந்நேரமும் அவனைத் தனது மடியிலேயே வைத்திருந்தாள்.

பாடசாலைக்குச் செல்லும் வயது ஆரூரனுக்கு வந்த போது பெற்றோர் அவனைப் பாடசாலைக்கு அனுப்பவில்லை. பாடசாலையில் தமது பிள்ளைக்குத் துன்பங்கள் வந்துவிடுமென அவர்கள் அஞ்சினர். பலர் தாய்க்கும் தந்தைக்கும் ஆரூரனைப் பாடசாலைக்கு அனுப்புமாறு கூறியபோதும் அவர்கள் பாடசாலைக்கு அனுப்பவில்லை. ஆரூரன் வளர்ந்து திருமண வயதை அடைந்தான். ஒரு நாள் அவன் கோயிலுக்குச் சென்ற

போது அழகான பெண் ஒருத்தியைக் கண்டு தன் மனதைப் பறிகொடுத்தான்.

அவளில்லாவிட்டால் தனக்கு வாழ்வு இல்லை என்று தனது பெற்றோருக்குக் கூறினான். அப்பெண் மிகவும் ஏழை. இருப்பினும் தமது குடும்பப் பெண்ணாகிவிட்டால் அவளின் தராதரம் உயர்ந்து விடும் என நினைத்து அந்தத் தனவந்தன் பெண்ணின் வீட்டிற்குச் சென்று தனது மகனின் விப்பதைக் கூறிப்பெண் கேட்டான். அதற்கு அவளது தந்தை சொன்னார்' "கல்லாத மூடரைக் காண்பது பாவம்' அவரோடு பேசுவதும் பாவம். கல்லாதவர்களால் எதிர்காலத்தில் கல்லாதவர் -களைத்தான் உருவாக்க முடியும். அதனால் கல்லாத ஒரு மூடரின் குடும்பத்தில் பெண் எடுங்கள்" என்றார்.

தனவந்தன் எதை எதையோவெல்லாம் கூறினான். பெண்ணின் தந்தை கேட்கவில்லை. ஆரூரன் தனக்கு அந்தப் பெண் தேவை என்று அடம்பிடித்தான். ஆரூரன் பெண்ணின் தந்தையை இரந்தான். பெண்ணின் தந்தை ' "எனது மகளைத் திருமணம் செய்ய விரும்பினால் விரும்புபவன் படித்துப் பண்டிதன் ஆக வேண்டும்"

என்றார். இப்போது ஆரூரன் படித்துக் கொண்டிருக்கிறான்.

## அறஞ்செயான் திறம்

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”

என்று ஔவையார் கூறியுள்ளார். இது எவ்வளவு உண்மை என்று நோய் உள்ளவர்களைக் கேட்டால் தான் தெரியும். பெரும்பாலான நோய்கள் மனிதனை வாழ்நாள் முழுவதும் துன்பப்படுத்திப் பின் கொன்று விடும். இதற்குப் பெரும் பெரும் பணக்காரர்கள் கூட விதிவிலக்காகி விட முடியாது.

வள்ளுவர் உணவை மருந்து என்று கூறுகிறார். முன்னர் உண்ட உணவு சமிபாடடைந்த பின்பே அடுத்த வேளை உணவை அளவோடு உண்ணுதல் வேண்டும். அப்படி உண்டு வந்தால் மருந்து உண்ணத் தேவையில்லை என்றும் சத்தான உணவு வகைகளைப் பசிவந்த பின் அளவோடு உண்ணுதல் வேண்டும் என்றும், ஒவ்வாத உணவு வகைகளை ஒரு போதும் உண்ணக் கூடாது என்றும் கூறுகிறார். இப்படி உண்பவனின் வாழ்வில் என்றும் இன்பம் நிலைத்திருக்கும் என்றும் , அளவுக்கதிகமாகக் கண்ட

கண்ட உணவுகளை அவாவோடு உண்பவனின் உடலைப் பல்வேறு வகையான நோய்கள் தாக்கி அவனது வாழ்வைக் கெடுக்கும் என்றும் வள்ளுவர் கூறுகிறார். இதையே இன்றைய மேலைத்தேய மருத்துவர்களும் கூறுகின்றனர்.

சமய நூல்களானாலும் சரி, இலக்கிய நூல்களானாலும் சரி மனிதனது நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு அவன் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்பி அவனுக்கு அதற்கான ஆலோசனைகளைக் கூறுகின்றன. முக்கியமாக அவை உணவைப் பற்றியே கூறுகின்றன. இந்து சமயங்கள் உணவை எப்படி உண்ண வேண்டும், என்னென்ன உணவு வகைளை உண்ண வேண்டும், என்னென்ன வகையான உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும் என்று கூறுகின்றன. அத்துடன் உணவை உண்ணாது விரதம் அனுஷ்டிக்க வேண்டும்மென்றும் அவ்வகையான விரதங்களை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும் என்றும் கூறுகின்றன. மருத்துவரிடம் ஒருவர் சென்றால் அவர் முதலில் கேட்பது அவர் உண்ணும் உணவு வகைகளைப் பற்றியே. அவர் உண்ணும் உணவுகளை அறிந்த பின்பே வைத்தியர் நோயின் தன்மையை அறிந்து அந்நோய்க்குத் தவிர்க்க வேண்டிய உணவு

வகைகளைப் பற்றிக் கூறுவார். பின் உடற்பயிற்சி செய்தல் வேண்டும் என்று கூறி அப்பயிற்சி செய்யும் முறைகளையும், அப்பயிற்சியால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும் கூறுவார்.

பெரும்பாலான நோய்கள் உணவுப் பழக்கத்தாலும், போதிய வேலைகள் இன்மையாலும் தான் வருகின்றன என்று மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

திருமூலர் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் தான் எழுதிய திருமந்திரம் என்ற சைவசமய சாத்திர நூலில் இந்த மருத்துவ ஆராய்ச்சிகளையெல்லாம் மறுத்துரைக்கின்றார். திருமந்திரம் சைவ சமய சாத்திர நூலாக இருந்தாலும் அது சமூகத்தைப் பற்றியும், கல்வி பற்றியும், ஒழுக்கத்தைப் பற்றியும் கூறுவதோடு மனிதனுக்கு வரும் நோய்களைப் பற்றிக் கூறி, அது ஏன் வருகிறது என்றும் கூறி அதற்கான மருந்து வகைகளையும் கூறுகிறது.

திருமந்திரம் ஒரு சைவ சமய மருத்துவ நூல். அது இன்றைய நவீன மருத்துவ முறைகளைப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் கூறியதோடு சமயத்தின்

மூலம் நோய் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் கூறுகிறது. அப்படி கூறும் பாடல் இது.

**"இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்**
**தருமஞ் செய்யாதவர் தம்பால தாகும்**
**உருமிடி நாக முரோணி கழலை**
**தருமஞ் செய் வார்ப்பக்கல் தாழகி லாவே"**

வறுமையைப் போலத் துன்பமானது உலகில் எதுவும் இல்லை. வறுமை என்ற பெரும்பாவி ஒருவனை நெருங்கிப் பிடித்தால் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிடைக்க மாட்டாது. அதனால் வறுமைப்பட்டவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்துப் புகழ் பெற்று வாழ வேண்டும். அதன் மூலம் வேண்டிய செல்வங்களையெல்லாம் பெறும் பலன் பெறலாம். அத்துடன் இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழலாம் என்றும், தானதர்மம் செய்வோர் இறைவனின் அன்புக்குப் பாத்திரமானவர்கள் என்றும் சமய நூல்கள் கூறுகின்றன. ஆனால் திருமூலர் தானதர்மம் செய்வோருக்குக் கொடிய நோய்கள் எதுவும் வராது என்று கூறுகிறார். சகல வசதிகளோடு வாழ்ந்தாலும் கொடிய நோய்கள் வந்தால் விரும்பிய உணவு

வகைகளை உண்ண முடியாது. புண்ணியஞ் செய்தவன் தான் விரும்பிய உணவு வகைககளை விரும்பியவாறு உண்பான்.

ஒரு பெரும் தனவந்தன் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெல்லும் கரும்பும் பயிரிட்டுள்ளான். இன்னொரு ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தென்னந் தோப்புள்ளது. ஆனால் அவனுக்கு நீரிழிவு, இரத்தத்தில் கொழுப்பு, உயர் குருதி அமுக்கம் போன்ற வியாதிகள் உண்டு. அதனால் வைத்தியர் அவனைச் சீனி சம்பந்தப்பட்ட உணவு வகைகளையும், எண்ணெய் சம்பந்தப்பட்ட உணவு வகைகளையும் உண்ணக்கூடாது என்கிறார். அதனால் அவன் அவற்றை உண்பதில்லை. தற்செயலாக உண்டால் மயக்கமடைந்து விடுவான். அதனால் அவனது மனைவி உப்பில்லாத பண்டங்களையே கொடுப்பாள்.

அவனிடம் கூலி வேலை செய்யும் மாதவன் கரும்புத் தோட்டத்தில் கரும்பை முறித்துக் கடித்து உண்பான். வயிறு நிறைய நெய்யில் பொரித்த உணவு வகைகளை உண்பான். அவனுக்கு எந்த நோயும் இல்லை. தினமும் அதிகாலையில் வேலைக்கு வந்து இரவாகும்வரை சுறுசுறுப்பாக வேலை செய்வான்.

அவனைப் பார்க்கத் தனவந்தனுக்குப் பொறாமையாக இருக்கும். ஒருநாள் தனவந்தன் அவனைக் கேட்டார்' "மாதவா, எனக்கும் உனக்கும் ஒரே வயது. நீ நன்றாக உண்கிறாய், கடுமையாக வேலை செய்கிறாய். ஆனால் என்னால் முடியவில்லை. எனக்கு என்ன வருத்தமென்று, வைத்தியர்களாலும் கண்டு பிடிக்க முடியவில்லை. உனக்கு நோய் வருவதில்லையா..?

"ஐயா எமது மூதாதைகள் வாழ்க்கையைப் பற்றி முழுமையாக எழுதியுள்ளனர். திருமூலர் என்ற சித்தர் நோயில்லாமல் வாழவேண்டுமென்றால் தானதர்மம் செய்யவேண்டுமென்று கூறுகிறார். அறஞ்செய்தால் நீங்காத துன்பத்தைத் தரும் எந்த நோய்களும் வராது. உடலை வருத்தும் தொழுநோய்களும் வராது. கர்மவினைகளால் வரும் புற்றுநோய் போன்ற கர்ம வியாதிகளும் வராது என்று கூறியிருக்கிறார். நான் உழைப்பதில் எனது குடும்பத்திற்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு மிகுதியைத் தானம் செய்து விடுகிறேன். அதனால் மறுநாட் தேவைக்கு உழைத்தல் வேண்டும். யாராவது கேட்டால் கொடுக்க வேண்டும் என்று நினைத்து உழைக்கிறேன். உழைப்பவன் எந்த உணவை உண்டாலும் அது

சமித்துவிடும். உழையாதிருந்து உண்பவனுக்கு உணவு சமிபாடு அடையாது. தானதர்மம் செய்தால் அதைப் பெறுவோர் மகிழ்வுடன் புகழ்வார்கள். அந்தப் புகழ்ச்சி மனதிற்கு எல்லையில்லாத இன்பத்தைக் கொடுக்கும். மகிழ்ச்சியுள்ளவனை நோய்கள் நெருங்கா. தேவைக்கதிகமான பொருளைப் பாதுகாப்பதால் மனதில் எந்நேரமும் அச்சம் இருக்கும். அத்துடன் பெரும் பணக்காரனாக வேண்மேன்ற எண்ணமும் இருக்கும். அவா இருக்கும். இவைதான் நோய்க்கான காரணிகள் அதனால் தானதர்மம் செய்யுங்கள். உங்கள் நோய்கள் யாவும் குணமாகும்" என்றாள் மாதவன்.

தனவந்தன் அன்றிலிருந்து தானதர்மம் செய்தான். இரண்டு வருடங்கள் கழித்த பின் அவனைத் தாக்கிய நோயின் தாக்கம் குறைந்திருந்தது. நோய்வருமுன்பே தானதர்மம் செய்திருந்தால் நோய் வந்திராது என்று நினைத்தான்.

# குதிரைக் காரனின் மகன்

சங்ககாலப் புலவர்களின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவையை உடையன.

பொதுவாகப் புலவர்கள் காதலைப் பற்றியும், பெண்களின் வனப்பைப் பற்றியும், ஆடவர்களின் மன உடல் திடத்தைப் பற்றியும், அரசர்களின் வீரதீரச் செயல்களைப் பற்றியும் புகழ்ந்து பாடியுள்ளனர். முக்கியமாகப் பெண்களையும் அரசர்களையும் புகழ்வது புலவர்களுக்குக் கைவந்த கலை. இந்த இருவகையிரையும் புகழ்ந்துபாடிப் பெரும் புகழையும், பெருஞ்செல்வத்தையும் சம்பாதித்து மிகமிக வசதியாக வாழ்ந்த புலவர்கள் பலர். ஆனால் பெண்களையும் அரசர்களையும் பெரிதாகப் புகழாது அவர்களைக் கேலி செய்து பாடிப்புகழ் பெற்ற புலவர்களும் உண்டு. ஆனால் கடவுளைப்பற்றிக் கேலியாகப்பாடுவது போலப்பாடி உண்மையான தத்துவத்தை மக்களுக்கு உணர்த்திப் புகழ்பெற்ற புலவர்கள் ஒரு சிலர் மட்டுமே. அவர்களில் காளமேகப் புலவர் மேலானவர். அவரைப் போலப் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்ற புலவர்கள் இல்லையென்று கூடச் சொல்லலாம்.

காளமேகப்புலவர் வைணவர். அவர் சைவ சமயத்தை உயிராகக் கொண்ட மோகனாங்கி என்ற பெண்ணின் அழகில் மயங்கி அவளின் அடிமையானார். அவளின் தாய் அவருக்குத் தனது மகளைத் திருமணம் செய்து கொடுக்க மாட்டேன் என்று சபதமிட்டாள்.

புலவரால் அந்த அழகிய மோகினியைப் பிரிந்திருக்க முடியவில்லை. அவள் இரவு பகலாகப் புலவரின் மனதில் தோன்றிச் சித்திரவதை செய்தாள். அதைத் தாங்க முடியாத புலவர் சைவசமயத்தில் சேர்ந்து தன் காதலியைக் கரம்பிடித்தார். அதன்பின் புலவர் சிவனைத் தவிர வேறு தெய்வங்களைப் பற்றிப் பாடுவதில்லை. அத்துடன் அரசர்களைப் பற்றியும் விலை மாதர்களைப் பற்றியும் கேலியும் கிண்டல் செய்தும் பாடி வந்தார்.

மதுரையில் காளமேகம் சிதம்பரத்தில் குடிகொண்டிருக்கும் மீனாட்சி அம்மையைத் தரிசித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த விநாயகர் அடியார், ஒருவர் புலவரே' சிவனையும், உமையையும் புகழ்ந்து பாடும் நீர் ஏன் அவர்களது புதல்வர்களைப் பற்றிப் பாடுவதில்லை எனக்காக விநாயகரைப் பற்றிப் பாடுங்கள்"என்று இரந்தார்.

புலவர் சிரித்துவிட்டுச் சொன்னார்' "நீர் குதிரைக்காரனின் மகனைப் பற்றியா புகழ்ந்து பாடச் சொல்கிறீர் பொதுவாகப் புலவர்கள் முன்பு சொன்னதையே திருப்பி வேறு வார்த்தைகளால் சொல்வார்கள். சொற்களால் விளையாடுவது

புலவர்களின் பொழுது போக்கு. ஆனால் காளமேகம் அடுத்தவர்கள் பாடாத, பாடத்துணியாத விடயங்களை மிகவும் இலகுவாகப் பாடுவார். அதில் கருத்துக்கள் மிகுந்திருக்கும். புலவர்கள் அவற்றைப் புரியாது தடுமாறுவார்கள். அரசனுக்கும் மக்களுக்கும் அது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரச அவையிலே எல்லாப் புலவர்களும் எதையெதைப்பாட வேண்டும் என்று தீர்மானித்துத் திட்டமிட்டுத்தான் வருவார்கள். ஆனால் காளமேகம் எந்தச் சிந்தனையும் இல்லாமல் சபைக்கு வருவார். கடைமொழி மாற்று என்பது செய்யுள் அணிகளுள் ஒன்று. செய்யுளின் கடைசிச் சொல்லை முன்னே வைத்துப் பொருள் சொல்லல் வேண்டும். இது மிக மிகக் கடுமையான பணி. ஆனால் காளமேகத்திற்கு இது கைவந்த கலை. ஒரு முறை சபையில், "மாடு தின்பான் பார்ப்பான், "மறையோதுவான் குயவன்" என்று பாடினார். அரசனும் மக்களும் திகைத்துத் திகிலடைந்தனர். எனினும் காளமேகத்தை எதிர்த்து ஒரு சொல் கூடப்பேச முடியாது. பேசினால் அவர் திட்டும் திட்டு வரலாறாகிவிடும். அதனால் எல்லோரும் பேசாதிருந்தனர். புலவர் தான் பாடிய பாடலின் இறுதிவரியான, "பரும்புடைவை தப்பு மறை" என்ற வரியின் இறுதிச்சொல்லான 'மறை' என்பதை முன்னே

வைத்து ‘மறை மாடுதின்பான் பார்ப்பான்’ எனக் கருத்துக் கூறினார்.

அதனால் குதிரைக்காரனின் மகன் என்ற பதம் விளங்காது கோயிலிலுள்ளோர் திகைத்தனர். எனினும் பேசாது காத்திருந்தால், தான் புலவரின் கவியை சுவைக்கலாம். எனப் பேசாதிருந்தனர். அப்பாடல் இது,

**“நல்லதொரு புதுமை நாட்டிற் கண்டேனதனைச்**
**சொல்லவா சொல்லவா சொல்லவா –தொல்லை**
**மதுரை விக்கினேச்சுவரனை மாதுமையாள் பெற்றாள்**
**குதிரை விற்க வந்தவனைக் கூடி”**

“பழமையான மதுரை நகரின் கண் வீற்றிருக்கும் விக்கினேஸ்வரனை, உமையம்மையானவள் குதிரைக்காரன் மீது காதலுற்றுப் பெற்றெடுத்தாள். இது விந்தையானது” மாணிக்க வாசகருக்காகச் சிவபெருமான் குதிரைகளை ஓட்டிக் கொண்டு மதுரைக்கு வந்த அந்தப் பெரு நிகழ்வை ஞாபகப்படுத்தவும், அதன் பெருமையை விளக்கவும் காளமேகம் அந்தச் சம்பவத்தை ஓர் அடியில் எடுத்தாண்ட விதம் இலக்கிய உலகிற்குப் புதுமையானது. நல்ல கருத்துக்களைக்

கவிதையாக்குவது அன்றிலிருந்து இன்றுவரை நடைபெற்று வந்தபோதிலும், பழைய கருத்துக்களைப் புதிய வடிவத்தில் கூறுவோர் மிகக்குறைவு. இந்த வகையில் காளமேகம் பழைய புராண நிகழ்வொன்றைப் பலரும் இரசிக்கும் படியும், அதன் உள்ளார்ந்த அர்தத்தைப் புரிந்து கொள்ளும்படியும் கூறியது போலக் கூறுவதற்கு இன்றுவரை யாரும் இல்லையென்றே கூறலாம்.

# வாய்ச்சொல்

**"தெரியாதவர் தம் திறனில் சொல்கேட்டால்,**
**பரியாதார் போல இருக்க! – பரிவு இல்லா**
**வம்பலர் வாயை அவிப்பான் புகுவரே,**
**அம்பலம் தாழ் கூட்டுவார்"**

என்பது பழமொழிநானூறுப்பாடல். நன்மை தீமைகளை அறிந்தும் அறியாதவர்கள் போலப் பேசுபவர்களின் பேச்சைக் கேட்கக் கூடாது. அதற்குப்

பதில் எதுவும் கூறவும் கூடாது. இப்படியானவர்களின் வாயைச் செயலின் மூலமே அடக்குதல் வேண்டும். அப்படியில்லாது பயனில்லாத சொற்களைக் கூறுவோருக்குப் பதில் கூறுவது ஊர்ப் பொதுவிடயத்தைத் தாழிட முயல்வது போன்றதாகும்.

தீமைகள் செய்து பழக்கப்பட்டவர்கள் தீயவர்களைக் கண்டு அஞ்சமாட்டார்கள். அப்படித் தீமை செய்பவர்களுக்கும் நன்மைசெய்தல் வேண்டும். அது தான் அவர்கள் திருந்துவதற்கான வழி என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. பலரும் கேட்டு வெறுக்கக் கூடிய தீய சொற்களைச் சொல்பவர்கள் நல்லவர்களின் ஏளனத்திற்கு ஆளாவார்கள். ஒருவன் பயனில்லாத தீமை தரும் சொற்களைப் பேசுவது தனக்குத்தானே தீமை செய்வதாகும். இவ்வகையான சொற்கள் பிற்காலத்தில் பேசுபவனுக்குப் பெரும் துன்பங்களைக் கொடுக்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார். நாவுக்கரசன் மிகவும் நல்லவன். ஊரில் உள்ளவர்கள் எந்த உதவியைக் கேட்டாலும் உடனே அதைச் செய்து கொடுப்பான். அவனது மனைவி வாசுகி. அவள் குடும்பத்திற்கேற்ற நற்பண்புகள் உள்ளவள். கணவனின் வருவாயை அறிந்து செலவு செய்பவள். ஆடம்பரமான பொருட்களின் மீது விரும்பம் இருந்தாலும்,

அது தனது கணவனின் வருமானத்திற்கு ஏற்புடையதல்ல எனநினைத்து அப்பொருளின் மீது ஆசைகொள்ளாதவள். நாவுக்கரசனின் மனம் கோணாத வகையில் நடந்து கொள்பவள்.

அவ்வூர்ச் சனசமூக நிலையத்தின் தலைவராக இருக்கும் தர்மலிங்கம் தீமையான செயல்களை அஞ்சாது செய்பவர். பயனில்லாத சொற்களை வாய் கூசாது பேசுபவர். அதனால் தீயவர்களிடம் பலமுறை அடிவாங்கியவர். இருந்தும் அவர் திருந்துவதாக இல்லை. சனசமூக நிலையத்தில் பல மோசடிகள் செய்தமையால் தர்மலிங்கத்தைத் தலைவர் பதிவியிலிருந்து ஊர் மக்கள் நீக்கிவிட்டு நாவுக்கரசனைத் தலைவராக்கினார்.

இது தர்மலிங்கத்திற்குப் பிடிக்கவில்லை. அதனால் நாவுக்கரசனைப் பற்றியும் அவனது குடும்பத்தினரைப் பற்றியும் சந்திகளில் இருந்து பொய்யான தகவல்களைக் கதைத்துக் கொண்டிருந்தார். அவரோடு திரியும் அவரது நண்பர்கள் அதை ஊர் முழவதும் கதைத்துத் திரிந்தனர். தர்மலிங்கம் தன்னைப்பற்றிக் கதைப்பதை நாவுக்கரசன் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை' "தன்னைப் பற்றி ஒருவன்

உண்மையானவற்றைக் கதைத்தால் அது உண்மையானால் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். பொய்யானவையானால் அதைக் கவனத்தில் எடுக்கக் கூடாது என்று நினைப்பவன் நாவுக்கரசன். அதனால் அவன் எதுவும் பேசவில்லை. நாவுக்கரசன் பேசாததால் உஷாரடைந்த தர்மலிங்கம் மேலும் மேலும் மிக மோசமாகக் கதைத்தார்.

இது ஊரில் உள்ள சிலருக்குப் பிடிக்கவில்லை. அதனால் ஒரு நாள் இரவு தர்மலிங்கம் தனிமையில் வரும்போது பலர் ஒன்று கூடி நின்று அவனைத் தாக்கினர்' "இனிமேல் யாரைப்பற்றியாவது தவறாகக் கதைத்தால் கொலைகூடச் செய்யத் தயங்கமாட்டோம்" என்று அவர்கள் தர்மலிங்கத்தை எச்சரித்தனர். அதன் பின் தர்மலிங்கம் வாய்திறக்கவில்லை.

ஒருவன் எதிரிகளுக்குத் தீமை செய்வதைவிடக் கொடியது பயனில்லாத சொற்களைப் பேசுவது. அதனால் அவர்கள் பகையை வளர்த்துக் கொள்வார்கள். அப்பகை வளர்ந்து ஒரு நாள் பெரும் துன்பம் செய்யும்.

# Jk;gpNa vd; Jauj;ijr; nrd;W nrhy;

அறவழியில் அவர்கள் இருவரும் காதல் கொள்கிறார்கள். அதனால் இரு குடும்பத்தினரும் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானிக்கின்றனர். திருமணம் செய்வதனால் செல்வம் நிறையத் தேவை. பாலை நிலத்தில் வாழும் அந்த இரு குடும்பத்தினரிடமும் போதிய செல்வம் இல்லை. தலைவன் தன் அன்புக்குரிய காதலியைப் பாலை நிலத்தில் வாழும் உயர்குடிப் பெண்களைப் போலச் சகல வசதிகளுடனும் வாழவைக்க வேண்டுமென்று விரும்புகிறான். அவள் ஒப்பற்ற அழகி. அதனால் பலர் அவளைத் திருமணம் செய்ய விரும்பினர். ஆனால் அவளோ இவனை உயிருக்குயிராகக் காதலித்தாள். பெற்றோர் ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்த போதும், அவளின் உறுதியான மனம் மாறாதென்பதை உணர்ந்து பெரும் மனத்துன்பத்துடன் ஒப்புக் கொண்டனர். அதனால் அவள் பேருவகையுற்றாள்.

அவளின் உறுதியான மனத்தின் போக்கால் தான் அவளது பெற்றோர் தன்னை அவளுக்குத் திருமணஞ்

செய்யச் சம்மதித்தனர் என்பது அவனுக்குத் தெரியும். அதனால் அவளைச் சகல வசதிகளோடும் வாழ வைப்பதற்காக அயல் நாடு சென்று உழைக்கத் தீர்மானித்தான். அதை அவன் அவளிடம் தெரிவித்த போது அவள் அதை விரும்பவில்லை' "அன்பான எனது காதலியே, என்னைக் காதலித்ததால் நீ பட்ட துன்பங்களை நான் அறிவேன். உனது உறுதியான மனமும், என் மீது நீ கொண்ட அன்பும்தான் எமது திருமணத்தை நிச்சயித்தன. உன்னைப் பாலை நிலத்தில் சகல வசதிகளோடும் வாழும் உயர் குடியிற் பிறந்த எயினர் இனத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் விரும்பினான். அவன் பெரிய வர்த்தகன். பெரியதொரு மாளிகையில் சகல வசதிகளோடும் வாழ்கிறான். அவனை விட்டு விட்டு நீ என்னை விரும்பியமையால், நான் அவனைப் போலப் பணம் சம்பாதித்த பின்பே உன்னை அடைய விரும்புகிறேன்." என்றான் கலங்கியபடி.

"அன்பரே, காதல் என்பது முன்வினைப் பயனால் வருவது. பணம் பொருளால் காதல் பிறப்பதுமில்லை, சிறப்பதுமில்லை. என்னை விரும்பிய அந்த உயர்குடியிற் பிறந்த பணக்கார இளைஞனின்

தந்தையார் தாசி வீடே கதியென்று கிடக்கிறார்.தந்தையின் குணம் தனயனுக்கும் வரும். நீங்கள் நல்லவர். அதை விட உங்கள் குடும்பத்தினர் சிறந்தவர்கள். அதனால் தான் நான் உங்களை விரும்பினேன். திருமணமான பின் முன்புபோலத் அன்பு செலுத்தினால் தான் காதலில் வெற்றி கிடைக்கும். அத்துடன் காதல் சிறக்கும். காதலைச் சிறப்பிக்க நல்ல மனம் வேண்டும். அது உங்களிடம் உள்ளது.” விம்மி விம்மி அழுதாள்.

“அன்பே உம்மை விட்டுப் பிரிய எனக்கு விருப்பமா…? பொருள்தேடுவது எமது காதல் வாழ்வைச் சிறப்பிக்கவே. நான் அயல் நாடு செல்ல மகிழ்வுடன் விடை தந்து அனுப்பும். நான் எவ்வளவு விரைவாக வரமுடியுமோ அவ்வளவு விரைவாக வருவேன்” என்று கட்டியணைத்தான். அவளால் மறுவார்த்தை பேச முடியவில்லை. மிகுந்த துன்பத்துடன் கண்களில் நீர் சொரிய அவனை அனுப்பினாள் அவள்.

அவன் சென்று ஒரு மாதம் கழிந்து விட்டது. அந்த ஒரு மாத காலம் ஒரு யுகம் போல இருந்தது அவளுக்கு. அன்று பௌர்ணமி நாள். மாலை நான்கு மணிக்கே சந்திரன் வானத்தில் தோன்றிக்

கண்சிமிட்டினான். அவன் இருந்த காலத்தில் மாலைப்பொழுது வருகிறதென்றால் அவளுக்கு இனம் புரியாத பல உணர்வுகள் உடலுள்ளும் மனதுள்ளும் வந்து சேர்ந்து விடும்.

அவன் தொழில் முடித்து வரும் போது குராம்பூ கொண்டு வருவான். அதைத்தானே அவளின் தலையில் சூடிவிட வேண்டும் என்று அடம்பிடிப்பான். அது அவளுக்கு மிகவும் பிடிக்கும். இருந்தும் அவனைச் சில கணம் துன்பப்படுத்த வேண்டும் என்பதற்காக அவள் சம்மதிக்கமாட்டாள். அவன் இரப்பான். அவளது உடலில் தொடுவான். சில சமயம் இறுக அணைப்பான். அதற்காக அவள் சில மணிநேரம் கழித்தே தனது கூந்தலில் பூச்சூட விடுவாள்.

அன்று அவள் இருந்த பக்கமாக தும்பி ஒன்று பறந்து வருந்தது. அதன் சோடியைக் காணவில்லை. அதைத் தான் தேடி வருகிறதோ என்று நினைத்தாள் அவள். பண்டைய தமிழ் மக்கள், அரசர்கள் தத்தம் காதலர்களுக்குத் தூதாகப் பறவைகளை அனுப்புவர். நளன் தமயந்திக்கு அன்னத்தைத் தூதாக அனுப்பியது எல்லோருக்கும் தெரியும். தமிழ் நாட்டில் வாழ்ந்த ஐந்து நிலத்தைச் சேர்ந்த மக்கள், அந்தந்த

நிலங்களில் வாழும் பறவைகளைத் தமது காதலர்களுக்குத் தூதாக அனுப்புவர். பாலை நிலத்தில் தும்பிதான் வாழ்கிறது. பாலை நிலத்தின் வெம்மை ஏனைய பறவைகள் வாழும் சூழலை ஏற்படுத்தாது.

அவர்கள் கூடி மகிழும் வேளைகளில் தும்பிகள் தான் அவர்களைச் சுற்றிப் பறந்து நோட்டமிட்டு அவர்களது லீலைகளைப் பார்த்து மகிழும். அதனால் அவள் தன்னைச் சுற்றிப் பறந்த தும்பியை நோக்கிச் சொல்கிறாள்' "அன்பான தும்பியே, நாமிருவரும் கூடிக் குலாவுகையில் வெக்கமின்றிப் பார்த்து ரசித்த நீ, இன்று அவரில்லாததால் நான்படும் துயரை அவருக்குச் சென்று சொல். அவர் வந்தாரேயானால் நாமிருவரும் வெட்கமின்றிக் கூடிக் குலாவுவதை நீ ரசித்துப் பார்க்கலாம். அதந்காக அவருக்குச் சென்று சொல் என்று அவள் சொல்கிறாள். "தும்பிசேர் கீரனார் என்ற புலவர் ஒரு பெண் தனது காதலனுக்குத் தும்பியைத் தூதாக அனுப்பியது பற்றிப் பாடிய பாடல் நற்றிணை என்ற நூலில் உள்ளது.

**"கொடியை வாழி தும்பி இந்நோய்**
**படுகதில் அம்ம யான் நினக்கு உரைத்தென**
**மெய்யே கருமை அன்றியுஞ் செவ்வன்**

**அறிவும் கரிதோ அறனி லோய் நினக்கே**
**மனையுறக் காக்கும் மாண்பெங்ரு கிடக்கை**
**நுண்முள் வேலித் தாதொடு பொதுளிய**
**தாறுபடு பீரம் ஊதி வேறுபட**
**நாற்றம் இன்மையிற் பசலை ஊதாய்**
**சிறுகுறும் பறவைக்கு ஓடி விரைவுடன்**
**நெஞ்சுநெகிழ் செய்ததன் பயனோ அன்பிலர்**
**வெம்மலை அருஞ்சுரம் இறந்தோர்க்கு**
**என்நிலை உரையாய் சென்றவண் வரவே''**

"தும்பியே, மாளிகையைச் சுற்றி அடைக்கப்பட்ட முள்வேலியில் படர்ந்திருக்கும் பீர்க்கம் பூவில் உள்ள தேனைப் பருகும் நீ, முன்பு போல வந்து என்னைச் சுற்றிப் பார்க்கவில்லை. அதற்குக் காரணம் எனது காதலரில்லை என்பதே. நீ உனது பெடையுடன் ஆனந்தமாக இருக்கிறாய். அதுபோல நானும் ஆனந்தமாக இருக்க வேண்டாமா..? தும்பியே, என் மீது இரக்கப்பட்டு எனக்காக நீ என்னைப் பிரிந்தவரிடம் சென்று எனது துயரைச் சொல்லி அவரை அழைத்துவா"

இவ்வாறு காதலரின் துயரத் தும்பியே சேர் கீரனார் எடுத்துரைக்கிறார். இவ்வாறு தூது அனுப்புவது பண்டு தொட்டு இன்று வரை நடைபெறுகிறது.

# யானை எழுதிய ஓலை

தமிழுக்குப் பெருமை சேர்த்த நூல்களில் ஒன்று முத்தொள்ளாயிரம். இதைப் பாடிய கவிஞரின் பெயர் தெரியாது. அவரின் ஊர் தெரியாது. காலமும் தெரியாது என்று நான் பார்த்த நூல் ஒன்று கூறுகிறது. புறத்திரட்டு என்னும் நூலில் சில முத்தொள்ளாயிரப் பாடல்கள் இருந்ததாகவும், அதன்பின்பு தான் முத்தொள்ளாயிரப்பாடல்கள் வெளிக்கொணரப்பட்டதாகவும் கூறப்படுகிறது. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் காதலைப் பற்றியும், வீரத்தைப் பற்றியும் சுவையாக முத்தொள்ளாயிரப் பாடல்கள் கூறுகின்றன. இதை விட மன்னர்களது படைகளைப் பற்றியும், அவை செய்த போரைப் பற்றியும், யானைகளின், குதிரைகளின் வீரத்தைப் பற்றியும் முத்தொள்ளாயிரம் விதந்து கூறுகிறது.

பாண்டிய மன்னனது யானையின் காதலைப் பற்றியும் முத்தொள்ளாயிரம் விதந்து கூறுகிறது. அது போலப் பாண்டியனது யானைப் படையில் உள்ள ஒரு யானையின் வீரத்தைக் கீழ்வரும் பாடல் புகழ்கிறது.

**"மருப்பூசியாக, மறங்கனல் வேல் மன்னர்**
**உருத்தகு மார் (பு) ஓலையாக, திருத்தக்க**
**வையகமெல்லாம் எம(து) என்(று) எழுதுமே**
**மொய்யிலைவேல் மாறன் களிறு"**

பாண்டிய மன்னனின் அவையில் பிறநாட்டு மன்னர்களுக்கு ஓலை (கடிதம்) எழுதுவதற்கெனப் பலரை அரசன் நியமித்திருப்பான். அப்படி நியமிக்கப்பட்டவனை அழைத்து மன்னன் சொல்வான். அதை அவன் எழுதுவான். எழுதிய பின்பு முதலமைச்சர் அவ் ஓலையை வாங்கிப் பலத்துப் படிப்பார். பின்பு அரசனிடங்கொடுப்பார். அரசன் அதைப் படித்து விட்டு கையொப்பமிடுவான். பின் ஒற்றனை அழைத்து அந்தந்த நாட்டு மன்னர்களுக்கு அனுப்புவான். இதுதான் நடைமுறை. ஆனால் வீரரான பாண்டிய மன்னன்ஒருனை இன்னொரு மன்னன் எதிர்க்கிறான். மன்னன் அனுப்பிய ஓலையை அவன் கணக்கெடுக்கவில்லை. போர்

மூண்டது. பாண்டியனது வீரம் செறிந்த யானை ஒன்று தனது மன்னனை எதிர்த்தவனைத் தனது தும்பிக்கையால் பிடித்து அவனைத் தனது கால்களுக்குள் வைத்து நசித்தவாறு அவனது நெஞ்சை ஓலையாகக் கருதி தனது தந்தத்தால் அவனது மார்பில், “உனது அழகிய விசாலமான இராச்சியம் முழுவதும் எமது பாண்டிய மன்னனுக்குச் சொந்தமாகி விட்டது” என்று எழுதியதாம்.

மன்னர்களைப் புகழ்ந்தால் அவர்கள் மகிழ்ந்து பரிசளிப்பார்கள். அதை விட புகழின் தன்மையைப் பொறுத்தும் பரிசளிப்பார்கள். அதனால் சங்ககாலப் புலவர்கள் தமது தேவைகளுக்காக மன்னர்களை அளவுக்கதிகமாகப் புகழ்ந்தனர். அத்துடன் அவர்களது படை பிரிவுகளையும் புகழ்ந்தனர்.

## பரியே சற்றுப் பரிவு காட்டு

பாண்டிய மன்னன் குதிரையில் ஏறி வீதி உலாச் செல்வான். பகலில் அலங்காரமாகச் செல்லும் அவன் இரவில் மாறு வேடத்தில் செல்வான். மன்னன் உலாவருகிறான் என அறிந்தால் அவ்வீதியில் இருக்கும் மக்கள் வீதியைப் பெருக்கிச் சுத்தம்செய்து, அலங்கரித்துப் பூரண கும்பம் வைத்து வரவேற்பர். வீதியோரத்தில் குழுமி நிற்கும் மக்கள் மன்னனைத்

தொழுவார்கள். கன்னிப் பெண்களை வீதிக்கு வரத் தாய்மார்கள் விடமாட்டார்கள். அதனால் கன்னிப் பெண்கள் தமது வீட்டில் இருந்து கதவின் நீக்கலூடாக மன்னனின் அழகை இரசிப்பார்கள் ’ வணங்குவார்கள்.

ஒரு பெண் பாண்டிய மன்னன் மீது காதல் கொண்டாள். அவனது தோள் வலிமையையும், அவனது மார்பில் உள்ள வீரத்தழும்புகழையும், அறிவும் கனிவும் மிக்க கண்களையும், அழகான புன்னகை தவழும் முகத்தையும், நீண்டு வளைந்திருக்கும் மீசையையும் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். அந்த ஆசை முற்றித் தீவிரமாகிறது. அவள் இருக்கும் வீதியால் அவள் காதலிக்கும் பாண்டிய மன்னன் வாரத்திற்கு ஓரிரு தடவைதான் செல்வான். மக்கள் அவ்வீதியில் திரண்டு நின்று மன்னனைப் பார்பார்கள். அவளுக்கும் வீதியில் நின்று மன்னனைப் பார்க்க ஆசை. ஆனால் தாய் விடமாட்டாள். அவளை வீட்டுக்குள் விட்டுக் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டுச் செல்வாள்.

அவள் மிகவும் சிரமப்பட்டுக் கதவை நீக்கிப் பார்ப்பாள். இதற்குள் பாண்டியன் சென்று விடுவான். பாண்டியனது குதிரை வேகங்கொண்டது. அதன்

வாயிலிருந்து எந்நேரமும் வெண்நுரை தள்ளிக் கொண்டிருந்தாலும் அது சளைக்காது புயலெனப் பறந்து விடும். அதனால் அவளால் மன்னனைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. அவனை முழுமையாகப் பார்க்க வேண்டுமானால் குதிரை இரங்க வேண்டும். குதிரை இரக்கமில்லாது. பகைவர்களைத் துரத்திப் பிடிக்க விரைவாக ஓடுவது போல ஓடிவிடும். இதனால் அப்பெண் குதிரையை நோக்கி' 'எனது மனங்கவர்ந்த காதலனை நான் முழுமையாகப் பார்க்க வேண்டும். மதங்கொண்ட யானையின் அகன்ற நெஞ்சைப் போல உள்ள எனது காதலரின் நெஞ்சைப் பார்த்து அதைத் தொழ வேண்டும். அதுவும் கதவு இடுக்குக்குள்ளால் பார்த்துத் தொழ வேண்டும். நீ எதற்காக அவசரப்பட்டு வேகமாக ஓடுகிறாய்? பகைவர்கள் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடுகிறார்களா…? அவர்களைத் துரத்துவது போல அவசரப்பட்டு வேகமாக ஓடுகிறாயே தயவு செய்து என் மீது பரிவு கொண்டு நான் காதல் கொண்ட வரை முழுமையாகப் பார்த்து ரசிக்க ஏதுவாக மெதுவாகச் செல்" என்று இரக்கிறாள்.

இவ்வாறு காதல் வசப்பட்ட ஒரு பெண் தனது காதலனைக் காண அவாக்கொண்டுள்ளதை மிகவும் இனிமையாக முத்தெள்ளாயிரத்தில் புலவர் பாடுகின்றார்.

**“போரகத்துப் பாடியுமா பாயா (து) ஒரு படியா,**
**உரகத்து மெல்ல நடவாயோ! பார**
**மவெங்கணி யானை மாறன் தன் மார்பம் -**
**கதவங் கொண் (டு) யாமும் தொழ”**

# ஆடல் மகளின் சபதம்

சங்ககாலத்தில் ஒழுக்கம் மிகவும் சீர்குலைந் திருந்தமையால் ஆடல் மகளிர் என்றுஅலங்கார வார்த்தையால் அழைக்கப்பட்ட விபச்சாரிகளின் திமிர் அதிகரித்திருந்தது. அவர்கள் அரசனையும், கிராமத்தவர்களையும், பெருந்தன வந்தர்களையும் தமது கைப்பிடிக்குள் வைத்திருந்தமையால் ஆணவம் மிக்கவர்களாகத் திமிருடன் நடந்து கொண்டனர். அரசனுக்குப் பல பெண்கள் வைப்பாட்டிகளாக இருந்தனர். அரசர் தாம் விரும்பிய அழகிய பெண்களையெல்லாம் தமது காம இச்சையைப் போக்குவதற்குச் சகல

சௌபாக்கியங்களையும் கொடுத்து அரச மரியாதையுடன் வைத்திருந்தனர்.

முத்தொள்ளாயிரம் என்ற நூல் சேரசோழ பாண்டிய மன்னர்களது வீரத்தையும் பலத்தையும் மிகைப்படுத்திக் கூறுகிறது. இவ்வரசர்கள் குதிரைகளில் பவனி வரும் போது ஊரில் உள்ள கன்னிப் பெண்கள் எல்லோரும் வீதிகளிலும், மாடங்களிலும் நின்று பார்த்து அவ்வரசர்கள் மீது காமம் கொள்வார்கள். இதை விரும்பாத தாய்மார் தமது கன்னிப் பெண்களை வீட்டு அறையுள் வைத்துப் பூட்டி விட்டுத் தாம் சென்று பார்ப்பார்களாம். ஆனால் அவர்கள் வீட்டுக்குள் பூட்டிய கன்னிப் பெண்கள் கதவின் பூட்டை எப்படியோ திறந்து சென்று அரசனின் அழகை ரசிப்பார்களாம்.

பல கன்னிப் பெண்கள் அரசனுடன் தாம் கூடி மகிழ்வதாகக் கனவு காண்பார்களாம். இதைவிட அரசனின் வாகனங்களான குதிரை, யானை போன்றவற்றையும் காதலிக்குமாம். இவற்றை முத்தொள்ளாயிரப் புலவர் மிகவும் சிறப்பாகக் கவிதை வடிவில் கூறியுள்ளார். இவற்றைப் படிக்கும் விபரமில்லாத பெண்கள் எது சரி எது பிழையென

அறியாது ஒழுக்கம் தவறியமை சங்க காலத்தில் சாதாரண சம்பவங்கள்.

குறுந்தொகை என்ற நூலில் மாங்குடி மருதன் என்ற புலவர் விபச்சாரியின் சபதத்தைப் பற்றிப் பாடியுள்ளார். அவன் பெரும் நிலச்சுவாந்தன். அவனை ஓர் அழகி தீவிரமாகக் காதலிக்கிறாள். அவனும் அவளை விரும்புகிறான். திருமணம் தடல்புடலாக நடைபெறுகிறது. திருமணம் முடிந்த சில நாட்களின் பின் அவன் கோயிலுக்குச் செல்கிறான். கோயிலில் ஓர் ஆடல் மகளின் நட்புக் கிடைக்கிறது. அதன் பின் அவன் அவளே தஞ்சமென அவளின் வீட்டில் தங்கி விடுகிறான். வீட்டுக்குச் செல்வதில்லை. மாதங்கள் பல கடந்தும் அவளின் மீதிருந்த மோகம் அவனுக்குக் குறையவில்லை.

கட்டிய மனைவி துடிதுடித்துப் போனாள். அவனை அழைத்துவரப் பல்வேறு முயற்சிகள் எடுத்தாள். விலைமகளின் பிடியில் இருந்த அவனுக்கு மனைவியின் நினைவு வரவில்லை. அதனால் மனைவி திட்டுகிறாள். வசியம் செய்து விட்டாள் எனக் குறைப்படுகிறாள்.

இதை அறிந்த அந்த விலைமகள் கூறுகிறாள்' “நான் எந்தப் பொடியும் போடவில்லை, மாந்திரீகர்களைக் கொண்டு வசியமும் செய்யவில்லை. எனது அழகில் மயங்கி வந்தான். நான் கொடுக்கும் இன்பங்களால் அவன் என்னைவிட்டுச் செல்கிறானில்லை. பொடிபோட்டும் வசியம் செய்தும் மயக்க முடியுமாயின் நீயும் பொடிபோட்டு வசியம் செய்யலாம்தானே! அதை விட்டு விட்டு ஏன் புலம்புகிறாய். நான் அவனை என்ன கட்டியா வைத்திருக்கிறேன். உன்னால் முடிந்தால் வந்து அழைத்துச் செல். அதைவிட்டு விட்டு வீண் பேச்சுப் பேசாதே. நான் உண்மையாகப் பொடிபோட்டும், வசியம் செய்தும் அவனை அழைத்திருந்தால் என்னை இந்தக் கடல் கொண்டு போகட்டும்” என்று சபதமிடுகிறாள்.

இவ்வாறு ஆடல் மகளிர் தமது தவறுகளை உணராது குடும்பப் பெண்களின் கணவன்மார்களை மயக்கித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ததோடு, அதுதான் நியாயம் என்று கூறியவற்றைக் கண்டிக்காது புலவர்களும் அவர்களுக்குச் சார்பாகவே நடந்து கொண்டமையை நாம் சங்கப்பாடல்களில் பல இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. புலவர்கள், அரசன் செய்யும் தவறுகளையும் மக்களின் ஒழுக்கக்

கேடுகளையும் கண்டித்தல் வேண்டும். அது அவர்களது கடமை மட்டுமல்லாது உரிமையும் கூட. இதை உணராதவர்களாகவே சங்ககாலப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள் என நாம் எண்ண வேண்டியுள்ளது. அதற்குக் காரணம் பொருள் மீது உள்ள ஆசை தான்.

மாங்குடி மருதன் என்ற புலவர் விலைமகளின் சபதத்தைப் பற்றிப் பாடிய பாடல் இது.

**கணைக் கோட்டு வாளைக்கமஞ் சூல் மடநாகு**
**துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்**
**தொன்று முதிர்வேளிர் குன்றூர்க் குணாது**
**தண் பெரும் பௌவம் அணங்குக – தோழி !**
**மனையோள் மடமையின் புலக்கும்**
**அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனினே"**

!

# ஆனந்த பரவசம்

அவள் மிகுந்த அழகி. காண்பவர்கள் திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டும் கவர்ச்சி அவளில் குடிகொண்டிருந்தது.

காந்தம் போலக் கவர்ந்திழுக்கும் கண்கள். அழகிய மிருதுவான சிவந்த கன்னங்கள். எடுப்பான மூக்கு, கண்டவர்களின் மீது கணை தொடுக்கும் புருவங்கள். சுண்டியிழுக்கும் கழுத்து. இவற்றைக் கண்ட ஆடவர்கள் பலர் அவள் மீது மையல் கொண்டு அவள் செல்லுமிடமெல்லாம் செல்கிறார்கள். அவள் தம்மை வாஞ்சையுடன் பார்க்கமாட்டாளா என்று ஏங்குபவர்கள் பலர். அவள் யாரையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. காலைவேளை அவள் பூக்கூடையுடன் அருகில் இருக்கும் கோயில் நந்தவனததிற்குச் செல்வாள். அவளைத் தரிசிப்பதற்காகப் பல இளைஞர்கள் ஆசார சீலர்களாகக் கோயில்களுக்கு வருவார்கள்.

அன்று காலை அவள் பூக்கூடையுடன் நந்தவனத்திற்குச் செல்கிறாள். பாண்டிய மன்னன் குதிரையில் வருகிறான். அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்கிறாள். அவனும் அதிசயித்தவனாய் மோகம் ததும்ப அவளைப் பார்க்கிறாள். கண்கள் அகல உதடுகள் பிரிகின்றன. ஒரு கணம்தான். அதை அவள் அவதானித்து விட்டாள். குதிரை வேகமாகச் சென்று மறைந்து விட்டது. ஆனால் அந்த ஒரு கணத்தில் நடந்த பேரின்ப நிகழ்வு அவளது மனதில் ஆளப் பதிந்து சித்திரவதை செய்கிறது. மகிழ்வுடன்

ஆரவாரமாகச் சிரித்துப் பேசும் அவள் ஆறியடங்கியிருப்பதைக் கண்ட தோழி ஆச்சரியப்படுகிறாள். அவள் இருக்கும் நிலையைப் பார்த்தால் எதையோ பறிகொடுத்து விட்டாளோ என்று எண்ணினாள் தோழி. அருகில் வந்தமர்ந்து' "யாரையாவது கண்டு மனதைப் பறிகொடுத்து விட்டாயா?" என்று கேட்டாள். பல இளைஞர்கள் அவளைச் சுற்றித் திரிவது அவளுக்குத் தெரியும். அதனால் தான் அப்படிக் கேட்டாள்.

காலையில் பாண்டியன் அவளைப் பார்த்த பார்வையும், அவனது புன்சிரிப்பைப் பற்றியும் கூறி' "என் அருமைத் தோழியே அவரிடம் சென்று, அவர் என்னை விரும்புகிறாரா என்று யாரும் அறியாதபடி அறிந்து வா" என்கிறாள்.

"தோழி சென்றுவிட்டாள். ஆனால் அவளது மனம் பரபரக்கிறது. அவர் என்னை விரும்புகிறார் போலத் தெரிகிறது. அதை எப்படி அறிவது. குறத்தியிடம் குறி கேட்கலாமா…? குறிகேட்டால் விடயம் பரவிவிடும். பின் அவர் விரும்பாவிட்டால் என்ன செய்வது?" அவளது

மனம் தவித்தது. அதனால் அவள் தானே குறிபார்க்க விரும்பினாள்.

குறிபார்க்க விரும்பும் பெண்கள் மணலைத் தமக்கு முன்னால் ஒழுங்காகப் பரப்புவார்கள். பின் கண்களை மூடிக்கொண்டு வலது கை ஆட்காட்டி விரலால் மணலின் ஒரு இடத்திலிருந்து சிறு சிறு வளையங்கள் எழுதி வட்டமாகக் கொண்டு போவார்கள். இப்படி எழுதிச் செல்லும் போது கடைசி வட்டம் முதல் வட்டத்தோடு பொருந்தினால் காரியம் வெற்றியாகும். இதைக் கூடல் இழைத்தல் என்பார்கள். அப்படிச் செய்யவும் அவளுக்குப் பயமாக இருந்தது. அதனால் அவள் தனக்கு முன்னால் மணலைப் பரப்பி விட்டு கண்களை மூடியவாறு ஆள்காட்டி விரலை மண்ணின்மேற் பிடித்தவாறு இழுக்கிறாள். தற்செயலாக முதல் எழுதிய வட்டத்துடன் இறுதியாக எழுதும் வட்டம் பொருந்தாது போனால் என்ன செய்வது என்ற பயம் சிறியதாக ஆரம்பித்துத் திகிலைக் கொடுத்தது. அதனால் எழுதாது இருக்கிறாள். தோழி அறிந்து வருவாள் என்று மனத்திற்குச் சமாதானம் கூறிய போதும் மனம் அதைக் கேட்க மறுத்து வட்டம் கீறிப்பார் என்று அவசரப்படுத்தியது. ஆனால் உள் மனம் அவசரப்படாதே தோழி வந்துவிடுவாள் என்றது.

எதுவும் செய்யத் தோன்றாது திக்பிரமை பிடித்தவள் போல வலது கை ஆள்காட்டி விரலை நீட்டியவாறு கண்களை மூடியபடி இருந்தாள் அவள். இவ் அரிய பாடல் முத்தொள்ளாயிரம் என்ற நூலில் உ ள்ளது. அதை எழுதியவர் யாரென்று தெரியாது விட்டாலும் ஒரு பெண்ணின் மனநிலையை இயல்பாகவும் சுவையாகவும் கூறுவதைப் பாராட்டியே தீர வேண்டும். அச்சுவையான காதல் பாடல் இது.

**“கூடல் பொரு மானைக் கூடலார் கோமானைக்,**
**கூடப்பெறுவேனல்க் , கூ (டு) என்று, கூடல்**
**இழைப்பாள் போல்க்காட்டி, இழையா (து) இருக்கும்**
**பிழைப்பில்ப் பிழைப்பாக் (கு) அறிந்து.”**

# காதலும் மோதலும்

மலையும் மலை சார்ந்த நிலத்தையும் குறிஞ்சி நிலம் என்பர். குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். அவனைக் காதல் தெய்வம் என்றும் கூறுவதுண்டு. முருகனது ஆறுமுகங்களில் ஒன்று வள்ளியை மணம் புரிய வந்தது. அந்த முகம் காதலர்களுக்கு உதவி செய்யும் என்று நக்கீரர் என்ற பெரும் புலவர் கூறுகிறார்.

குறிஞ்சி நில ஆடவன் ஒருவன் அதே நிலத்தில் இன்னொரு மலையில் வாழும் பெண்ணைக் கண்டு காதல் கொள்கிறான். அவனால் அவளைப் பார்க்காது இருக்க முடியவில்லை. அதனால் தினமும் அவள் குளிக்கும் அருவிக்கரையால் செல்கிறான். எவ்வளவோ முயன்றும் அவள் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அதனால் மனம் வருந்திய அவன், அவள் வாழும் மலையைச் சேர்ந்த ஓர் இளைஞனுடன் நட்புக் கொள்கிறான். நட்பான பின் அவன் ஒரு செங்காந்தள்பூ வினைக்கொண்டு வந்து அதை அவனிடம் கொடுத்துத் தனது எண்ணத்தை அவளுக்குப் புரிய வைக்குமாறு இரக்கிறான். அந்தக் காலத்தில் பூக்களைக் காதற் பரிசாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

அதைக் கேட்டதும் அவனுக்குக் கடும் கோபம் வந்தது ’ “இதோ பார் எங்களது தெய்வம் யார் தெரியுமா? முருகன். அவன் ஆட்சி செய்யும் மலை இது. அவன் தேவர்களுக்கு இடைவிடாது துன்பங்கள் பலவற்றைச் செய்த சூரரைக் கொன்று குவித்தவன். அப்போர் நடைபெற்ற பொழுது போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடியது. அவனது வாளும் அம்புகளும் இரத்தம் தோய்ந்தவை. அவனது கால்களில் வீர வளையல்கள் எந்நேரமும் தொங்கும். அவன் யானையில் பவனி வரும் போது அசுரர்கள் அஞ்சி நடுநடுங்குவார்கள். அத்தைகய வீரமுள்ள முருகனது போர் வீரர்கள் நாங்கள். அத்தகைய வீரர்களைக் கொண்டு ஏவல் செய்ய நினைக்கிறாயா? எமது மலை முழுவதும் செங்காந்தள்ப் பூக்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்றன. அவற்றைப் பறித்து நாம் பெண்களுக்குக் கொடுப்போம். இப்பொழுது நீ கொண்டு வந்த காந்தள்ப் பூவைக் கொண்டு திரும்பிப் பார்க்காது ஓடிவிடு. நின்றாயானால் அசுரர்களுக்கு நேர்ந்த கதிதான் உனக்கும் நேரும்” என்றான்.

வந்தவனின் முகம் வாடியது. நின்று கதைத்தால் கொன்று விடுவானோ என்ற அச்சம் மனதில் எழுந்தது. இருப்பினும் அவனது கண்களுக்குள் அவனது மனதைக்

கவர்ந்த சிங்காரி தோன்றிச் சிரித்து அவனைத் தடுமாற வைத்தாள். வேறுவழியின்றி அவன் திரும்பி நடந்தான். மீண்டும் ஒரு முறை இரந்து பார் என்று மனம் பரபரத்தது. ஆனால் அவனது தோற்றத்தையும், கண்களில் தோன்றிய கோபத்தையும் வார்த்தைகளில் இருந்த அர்த்தத்தையும் நினைத்துப் பயத்துடன் நடந்தான் அவன். திப்புத் தோளார் என்ற புலவர் குறிஞ்சி நிலத்தைப் பற்றியும், அங்கு கோவில் கொண்டிருக்கும் முருகனைப் பற்றியும், அங்கு வாழும் பெண்களின் அழகு பற்றியும், அங்குள்ள வீரர்களைப் பற்றியும் பெருமையாகப் பாடிய பாடல் இது. காதலின் பெருமையைப் பற்றியும், காதல் தெய்வமான முருகனின் வீரத்தைப் பற்றியும், அங்குள்ள வீரர்களைப் பற்றியும். ஒரே பாடலில் சிறப்பித்துக் கூறியுள்ளார். பாடலின் நான்கு வரிகளும் நாலாயிரம் செய்திகளைக் கூறுகின்றன. இதிலிருந்து புலவரது புலமை சொல்லாமலே புரிகிறது. திப்புத் தோளார் பல பாடல்களைப் பாடவில்லை. ஆனால் பாடிய பாடல்கள் அர்த்தம் பொதிந்தவை’உயிரோட்டமானவை ’ உண்மைத் தன்மையை நலன்களை உணர்த்துபவை. இவ்வாறான பாடல்கள் மிகக் குறைவாகவே அன்று பாடப்பட்டன. அந்த அருமையான பாடல் இது.

**“செங்களம் படக்கொன்று, அவுணர் தேய்த்த,**

**செங்கோல் அம்பின், செங்கோட்டு யானை,**
**கழல் தொடி சேய் குன்றம்**
**குருதிப் பூவின் குலைகாந்தட்டே”**

# ஒன்றை விடு

**“காமம் விடு ஒன்றோ ’ நாண் விடு நல் நெஞ்சே!**
**யானோ பொறேன் இவ் விரண்டு”**

“அன்பான எனது நெஞ்சே, அழகான திடமான மார்புள்ள அந்த இளைஞன் மீது கொண்ட காமத்தை விடு ’ இல்லாவிட்டால் பெண்களுக்கே இயல்பாக உள்ள நாணமாகிய வெட்கத்தை விட்டுவிடு. இரண்டில் ஒன்றை விடா விட்டால் அதனால் ஏற்படும் கொடுமையான காம உணர்வுகளை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அவனது நினைவுகள் தோன்றித் தோன்றி என்னைச் சித்திரவதை செய்கின்றன. என்னால் அவனை மறக்க முடியவில்லை. அதனால் வெட்கத்தை விட்டு விட்டுத் துணிவுடன் உனது காதலை அவனிடம் சொல்லு”

இவ்வாறு காதல் வசப்படும் ஒரு பெண் தனது மனதுக்குக் கூறுவதாக வள்ளுவர் கூறுகிறார்.

திருக்குறள் கற்றவர்களிற் சிலர் அது ஒரு சமண நூல் என்று கூறுகின்றனர். அதற்குக் காரணம் திருக்குறளில் எந்த ஓர் இடத்திலும் கிரியை, யாகம் பற்றிக் கூறாமை ஆகும். ஆனால், திருமந்திரமும், சிவஞானபோதத்தின் தொன்மையைக் குறிக்கும் பாடலும் திருக்குறளை வேதம் என்கின்றன.

திருமந்திரத்தின் 61 ஆவது பாடல் வேதச் சிறப்புப் பற்றி இவ்வாறு கூறுகிறது' "வேதத்தை விட்ட அறம் இல்லை. வேதத்தின் ஓதத் தகும் அறம் எல்லாம் உளதர்க்க" என்று கூறுகிறது. இதற்கு உரை எழுதிய திரு.ப. இராமநாதபிள்ளை செந்தமிழ்ப் பொது அறநூல் திருவள்ளுவ நாயனார் அருளிய திருக்குறள் ஆகும்" என்று எழுதியுள்ளார். இந்நூலை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது.

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம், என்ற முப்பாலில் இன்பத்தை மூன்றாவதாக வைத்திருக்கிறார். ஆனால் மறைமலை அடிகள் இன்பம் தான் முதலில் வரவேண்டும் என்பது மரபென்றும், அதை தொல்காப்பியம் கூறுகிறது என்றும் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் காதலுக்கு அனுசரணை உடையவராகவும், காதலர்களுக்கு உதவுபவராகவும் இருந்திருக்கிறார். காதல் கொள்வது தவறல்ல. அது இயல்பு. “காதல் கொள்பவர்கள் இரவிலும் சந்தித்துப் பேசலாம். பெற்றோர் விரும்பாவிட்டால் தோழியின் உதவியுடன் காதலனுடன் ஓடிப்போகலாம். ஆனால், மரபு தவறக்கூடாது. ஒழுக்கமும் தவறக்கூடாது” என்று போதனை செய்கிறார்.

காதலரின் மனம் பஞ்சுப் பொதியைப் போன்றது. காதல் தீப்பொறி காதலரின் மனதில் உண்டாகும் எண்ணங்கள் எண்ணெய், அதனால், காதலிப்பவர்களின் நெஞ்சு அவர்கள் சந்திக்காத வேளைகளில் எரிமலையாகக் குமுறி எரிந்து கொண்டிருக்கும். இதை அனுபவத்தால் உணர்ந்த வள்ளுவர், காதலைப் பற்றி மிகவும் விரிவாகவும், சுவையாகவும் கூறுகிறார்.

அவள் பெருந்தனவந்தனின் ஏகபுதல்வி. தனவந்தன் ஊரில் பெரியவன் ’ செல்வாக்கு மிக்கவன். அதனால் அவனை எதிர்க்க ஊரில் உள்ளவர்கள் அஞ்சுவர். அவனது மகள் எங்கு சென்றாலும் தனது

தோழிகள் சிலருடன் செல்வாள். அவளைக் காண்போர் அவளது தந்தைக்குக் கொடுக்கும் மதிப்பு, மரியாதைகளைக் கொடுப்பர். ஆடவர்கள் அவளைக் கண்டால் மறைந்திருந்து பார்பார்கள். அவளை யாராவது பார்த்துச் சிரித்தால் தகப்பன் கொன்று விடுவார் என்று அஞ்சினர்.

அவள் ஓர் இளைஞனைக் கோயிலில் கண்டாள். அவனது தோற்றமும் செயல்களும் அவளைக் கவர்ந்தன. அதனால் அவனை அவள் காதலித்தாள். எந்நேரமும் அவளது மனதில் அவன் உலாவினான். அவனைச் சந்திக்கும் போதெல்லாம் அவனை ஏக்கத்துடன் பார்ப்பாள். கண்கள் காதல் மொழி பேசும். உதடுகள் பிரிந்து, மலர்ந்து சொற்களை உதிர்க்கத் துடிக்கும். ஆனால், அவன் ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை.

அதைச் சொல்லவும் பயம். தோழிக்குச் சொன்னால் அவள் பயப்படுவாளே தவிர, உதவி செய்ய மாட்டாள் என்று எண்ணினாள்அவள். இரவில் அவள் நித்திரை கொள்வதில்லை. நடுச்சாமத்தில் ஊளையிடும் நாய்களின் ஓசை கூட அவளைச் சித்திரவதை செய்யும்.

அதனால் அவள் இரவில் தானே கேள்விகளையும் கேட்டுப் பதிலையும் தனக்குச் சொல்வாள்.

“அன்பான எனது மனமே! காதல் கொள்வது இயற்கை. அதனால் காதலைக் கைவிட முடியாது. கைவிட்டாலும் நிம்மதியாக வாழ முடியாது. அதனால் வெட்கத்தை விட்டு விட்டு அவனிடம் உனது காதலைக்கூறு. காதல் கொள்வோர் எதற்கும் அஞ்சமாட்டார்கள். அதனால் அவன் உன்னை அழைத்துச் சென்று விடுவான். பின்பு பெற்றோர் சம்மதித்து ஏற்றுக் கொள்வார்கள்”. அதை அவளது உள்மனம் எற்றக் கொள்ள மறுத்து உபதேசம் செய்தது. அதனால் வெறுப்படைந்த அவள்’ “துணிவில்லாத மனமே” வெட்கத்தைவிட மறுக்கும் உன்னோடு நான் பேசமாட்டேன்” என்று அழுதாள்.

## காதலர் சேரும் வழி

“ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்

நீராக நீளும் இந் நோய்”

காதலிப்பவர்களுக்கு ஊர் மக்களாலும், பெற்றோர்கள், இனத்தவர்களாலும் மிகக் கொடுமையான எதிர்ப்புக்கள் பல உண்டாகும். அதைப் பற்றி அவர்கள் ஒரு போதும் கவலைப்படக்கூடாது. காதல் என்ற பயிர் செழித்து வளர ஊரார் செய்யும் கொடுமைகள் நீராக மாறும். அதுபோலப் பெற்றோர், இனத்தவர்கள் செய்யும் கொடுமைகள் எருவாக மாறும். இப்படி நீராகவும் எருவாகவும் கொடுமைகள் மாறுவதால் காதலர்களுக்கு நன்மைகளும் இன்பங்களும் வருமே தவிர ஒரு போதும் துன்பங்கள் வராது என்கிறார் வள்ளுவர்.

வீட்டாருக்குக் காதலிக்கும் விடயம் தெரிந்ததும் தனது மகள் காதலிப்பவன் நல்லவனென்றாலும் அவன் தீயவனாகவே தென்படுவான். அதனால் அவர்கள் வெறுப்பார்கள். ஊரார் அறிந்தால் நடக்காதவற்றையெல்லாம் நடந்ததாகக் கற்பனை செய்து கூடியிருந்து கதைப்பார்கள். அதனால் காதலிக்கும் விடயம் ஊர் முழுவதும் பரவும். காதலைப்பற்றிக் கதைப்பது மிகவும் இன்பமானது. அதனால் ஊரவர் விரும்பிக் கதைப்பார்கள். இதனால்

ஊரில் உள்ள ஆண்கள் சம்பந்தப்பட்ட பெண்களைத் திருமணம் செய்ய விரும்ப மாட்டார்கள்.

சங்ககாலத்தில் காதலைச் சேர்த்து வைப்பதில் தோழிகள் பெரும் பங்காற்றினர். காதலிப்பது பெற்றோருக்குத் தெரிந்து, அவர்கள் விரும்பாவிட்டால் தோழி காதலனைச் சந்தித்துக் காதலியைக் கூட்டிச்செல்லும்படி வற்புறுத்துவாள். இதனால் காதலி தனது தோழியின் உதவியுடன் தனது காதலனுடன் சென்று விடுவாள்.

அதை அனுபவபூர்வமாக உணர்ந்த வள்ளுவர் காதலருக்கு எதிர்ப்பு வந்தால் அது காதலை வளர்க்கும் என்று கூறிக் காதலனைச் சமாதானப்படுத்துகிறார்.

அவள் பெரும் தனவந்தனின் மகள். அவன் தனவந்தனின் வேலைக்காரன். அவனின் அழகில் மயங்கிய அவள் அவனை அடிக்கடி சந்திக்கிறாள். அவர்கள் இரவில் சந்திப்பதற்கு அவளது தோழி உதவி செய்கிறாள்.

பல நாள்த் திருடன் ஒரு நாள் அகப்பட்டு விடுவதைப் போல அவர்கள் இரவில் சந்திப்பதை தனவந்தனின் கையாள் ஒருவன் கண்டு தனவந்தனுக்குச்

சொல்லி விடுகிறான். தனது வேலைக்காரனுக்குத் தனது மகளைத் திருமணம் செய்து வைக்க விரும்பாத தனவந்தன் தனது மகளை வீட்டுக்குள் வைத்துப் பூட்டியதோடு அவனை தனது கையாட்களைக் கொண்டு வேறொரு ஊருக்கு அனுப்பி விட்டான்.

இருவரது காதல் விடயம் ஊருக்குத் தெரிய வருகிறது. ஊரவர் பலவாறு கதைக்கின்றனர். அவள் தான் கர்ப்பமாக இருப்பதாகத் தன்னை காவல் செய்யும் பெண்களுக்குக் கூறுகிறாள். பொய்யாகச் சொன்னதை மெய்யென்று நம்பி வேலைக்காரர்கள் ஊர் முழுவதும் பரப்புவார்கள் என்று எண்ணினாள் அவள்.

அவளது செயல் பலித்தது. ஊர் முழுவதும் அவள் கர்ப்பமாக இருக்கிறாள் என்று கதைத்தது. தனவந்தன் அவளை விசாரித்தான். மருத்துவர்களைக் கொண்டு பரிசீலித்தான். அதன் பின் அவன் தனது மகள் கர்ப்பவதியல்ல என்று சொன்னான். ஆனால் அதை நம்ப ஊர் தயாராக இல்லை. தோழி, அவனைத் தேடிச் சென்று' "நீ அவளை அழைத்துச் செல்லாவிட்டால் அவள் தற்கொலை செய்து விடுவாள்" எனப் பயமுறுத்தினாள். அதனால் பயந்த அவன்

தோழியின் துணையோடு அவளை அழைத்துச் சென்று விட்டான்.

திருக்குறளைப் பற்றிப் புகழாத புலவர்கள் இல்லை. சைவ சித்தாந்த நூலான சிவஞானபோதத்தின் தொன்மைச் சிறப்பைக் கூற பாடலொன்று ' “வேதம் பசுவதன் பால் மெய்யாகமம் நால்வர் ஓதும் தமிழதனின் உள்ளூறு நெய்” என்று கூறுகிறது. வேதத்தின் பிழிசாறான திருக்குறள் பசுவின் பாலாகும். திருமந்திரம் வெண்ணெய் ஆகும் என்பது அதன் கருத்து.

காதலைப் பற்றியும் காதலிக்கும் முறைபற்றியும், எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் விதம் பற்றியும், பெண்களிடமிருந்து பெறும் இன்பங்களைப் பற்றியும் மிகவும் விரிவாகவும் சுவையாகவும் திருக்குறள் கூறுகிறது. 2000 வருடங்களுக்கு முன்பு வள்ளுவர் கூறியவை என்றும் எவருக்கும் பொருந்தும்.